# ஒரு பித்தனின் குறிப்புகள் ஓஷோ.

## அறிமுகம்:

நம் ஒவ்வொருவரின் அடி ஆழத்திலும் தொடப்பட வேண்டும் என துடிக்கும் நம் கனவிலும் கற்பனை செய்யாத ஆனால் நிச்சயமாக உண்மையாக இருக்கும் ஒரு கனவிற்கு நம்மை எழுப்பும் ஒரு இடம் இருக்கிறது. அந்தக்கனவு வீட்டிற்கான நமது தேடல்.

இந்த சிறிய புத்தகத்தின் பக்கங்களுக்குள் நீங்கள் ஞானமடைந்த குரு, ஓஷோவை சந்திப்பீர்கள். அவர் நம்மிடம் அவர் வெறும் ஒரு சாதாரண மனிதர் நம்மைப்போன்றவர் என்று கூறுகிறார். ஆனால் ஒரே ஒரு விதிவிலக்கு. அவருடைய வீட்டிற்கான தேடல் முடிவடைந்துவிட்டது. அவர் எழுந்து விட்டார். பகவான் நம்மிடம் இதையும் கூறுகிறார். அதாவது அவர் தன்னுடைய வாழ்க்கையை மற்றவர்கள் இந்த ஆனந்தமான பரிசான எழுதலை அனுபவிக்க உதவுவதற்காக அர்ப்பணித்து விட்டதையும் கூறுகிறார்.

போதிசத்வா சுவாமி ஆனந்த் மத்தியபா.

## தொடர் 1

### சந்திப்பு 1

பயத்தின் காரணமாக ஒருபோதும் செயல்படாதே.என்னுடைய உடலைப்பற்றி கவலைப்படாதே. அது பரவாயில்லை. என்னுடைய உடல் சொல்வதை கேட்காதே ஆனால் நான் சொல்வதை கேள். என்னுடைய உடல் எப்போதும் ஒரு மாதிரியாகவே இருக்கும்….. அது அப்படித்தான் இருந்தாக வேண்டும்.

ஒருமுறை நீ விழிப்புணர்வு அடைந்துவிட்டால் உடலுக்கு தன்னுணர்வின் மீது அதற்கு இருக்கும் பிடி தளர தொடங்குகிறது.

ஒருமுறை நீ விழிப்புணர்வு அடைந்துவிட்டால் நீ இனிமேலும் இந்த உலகத்தை சேர்ந்தவனல்ல. அதனால் தால் ஞானமடைந்த ஒருவர் இறக்கிறார் மற்றும் மீண்டும் பிறப்பதில்லை. அவர் பிறக்க முடியாது அது இயலாதது. அவர் இன்னொரு உடலை எடுக்க முடியாது. இதுதான் எனது கடைசி உடல்.

கடைசி உடலில் இருக்கும் ஒரு மனிதரோடு இருப்பதற்கு நீங்கள் அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும். நான் திரும்பவும் இருக்க மாட்டேன். ஏனெனில் நான் இருப்பு. ஒருமுறை நீ இருப்பாகிவிட்டால் நீ திரும்பவும் பிறக்க முடியாது. இருப்பு தான் விஷயம். இருப்பு தான் எப்போதும் இருப்பது. உடல்கள் வருகின்றன மற்றும் போகின்றன. இருப்பு அப்படியே இருக்கிறது. உடல்கள் பிறக்கின்றன மற்றும் இறக்கின்றன. இருப்பு பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை.

இசை அழகாக இருக்கிறது. ஆனால் அதை நிறுத்துங்கள். நான் கணிக்க இயலாதவன். அது அழகானது ஆனால் உச்சக்கட்ட பறத்தலுக்கு ஒரு தடை. அது ஒரு பாலம் மற்றும் நீ உன்னுடைய வீட்டை ஒரு பாலத்திற்கு கீழே உருவாக்கிக் கொள்ள முடியாது. பாலம் விடப்பட வேண்டும். முகமது இசையை வெறுத்தார் ஏனெனில் இசையின் அழகே ஒருவரை வேர்கொண்டிருக்க செய்து விடும். அது இதற்கும் அதற்கும் இடையிலுள்ளது. ஆனால் எனக்கு அது மட்டுமே வேண்டும். உடலில் சிறிது அதிகமாக வேர் கொள்வதற்காக பகலில் நான் இசையை கேட்கிறேன். ஏனெனில் நான் உங்கள் மீது மிகவும் அன்பு செலுத்துகிறேன். நான் அன்பு செலுத்தும் மக்களுக்காக ஒரு வீட்டை உருவாக்க விரும்புகிறேன். நான் கனவு கண்டேன், ஆனால் என்னுடைய கனவை உண்மையான ஒன்றாக்க என்னால் முடியவில்லையென்று சரித்திரம் சொல்வதை நான் விரும்பவில்லை. இதற்காக மட்டுமே நான் இந்த உடலில் இருக்க விரும்புகிறேன். இந்த அறையில் கூடியிருக்கும் அனைவரும் எனக்கு உதவி செய்கிறீர்கள். அனைவருக்கும் நன்றி.

நான் ஒருபோதும் விவேக்கிற்கு எளிய விஷயங்களுக்கு நன்றி சொன்னதே இல்லை. எனக்கு அவள் செய்யும் தொண்டு வெறுமனே

வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. அவளுக்கு நன்றி சொல்வது பயனற்றது. அது போதுமான ஆழமுடையதாக உண்மையானதாக இருக்க முடியாது. கடந்த சில மாதங்கள் மிக கஷ்டமாக உள்ளது. உடலில் தங்குவது மிகவும் கஷ்டமாக உள்ளது.

பல வருடங்களாக அவள் எனக்கு மிக அழகாக தொண்டு செய்கிறாள். ஒரு நிழலைப்போல என்னுடன் இருக்கிறாள் ஆயிரத்தொரு விஷயங்களை செய்கிறாள். நான் சொல்வதற்கு முன்னால் எனது தேவையை அவள் அறிவாள். நான் அவளுக்கு நன்றி கூறியது இல்லை. நான் எப்படி அவளுக்கு நன்றி கூற முடியும்? அதற்கு எந்த வழியும் இல்லை. ஆங்கில வார்த்தையான “தேங்க்யு” மிகவும் தொலைவில் உள்ளது. அல்லது என்னுடைய உடலை கவனித்துக்கொள்ளும் உங்கள் அனைவருக்கும் நான் அதை உபயோகப்படுத்த முடியாது. இது வெறும் எனது உடல் அல்ல. ஆனால் உலகத்திலுள்ள ஆயிரகணக்கான மக்களுக்கு எனது உறுதிமொழி.

நான் இந்த உயரங்களை அறிவேன். ஆனால் உடலின் வழியாக இப்போது இராசயனங்களை உபயோகப்படுத்தி புத்தர் ஏசு லாவோட்சு.... ஆகியவர்கள் கண்ட உயரங்களை காண்பது சாத்தியமா என நான் பார்க்க விரும்புகிறேன். அது சாத்தியம் என்று நான் நினைக்கிறேன்.

நூலகத்தில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் உள்ளன. இந்த அழகான நூலகத்தில் ஒரு இலட்சம் புத்தகங்களுக்கு மேல் உள்ளது. நான் நூலகத்தை நேசிக்கிறேன். இதுவரை எழுதியவற்றில் சிறந்தது அனைத்தும் இங்கு உள்ளது. நான் இதை அனைத்தையும் நமது பல்கலைக்கழகத்திற்கு தருகிறேன். இந்த ஆயிரக்கணக்கான புத்தகங்களுக்குள் நான் ஒரே ஒரு புத்தகத்தை மட்டுமே கையில் எடுத்துக் கொள்ள சொன்னேன். அந்த புத்தகம் அடையாத ஒரு மனிதனால் ஆனால் மிக அருகில் மிகமிக அருகில் வந்தவனால் எழுதப்பட்டது. – கலீல் ஜிப்ரான். நான் பலமுறை அவருடைய புத்தகத்தைப் பற்றி பேச விரும்பினேன். ஆனால் பேசவில்லை. காலம்

இன்னும் கனியவில்லை. அவர் ஒரு கவிஞர் மட்டுமே ஒரு ஞானியல்ல. உண்மையிலேயே அறிந்த ஒருவரல்ல. ஆனால் அவருடைய கற்பனையில் அவர் உயரங்களை அடைந்திருக்கிறார்.

வால்ட் ஒயிட்மேன் தான் இந்த உயரங்களைப்பற்றி பேசிய ஒரே அமெரிக்கன் ஆனால் அவரும் தவற விட்டு விடடார். ஓரத்திலிருக்கும்போது அவர் தவற விட்டுவிட்டார். அவருடைய ஓரினச்சேர்க்கையின் காரணமாக தடுக்கப்பட்டு விட்டார். அதை பொறுத்த வரை அது பெரிய விஷயமல்ல. ஆனால் நிலை மாற்றத்தைப் பொறுத்த வரை அது ஒரு பெரிய விஷயம். அவர் தவற விட்டுவிட்டார். அவர் ஒரு அழகான கவிதை புத்தகத்ததை எழுதினார் ஆனால் இந்த உயரத்திற்கு அவரால் செல்ல முடியவில்லை. அவருடைய இரசாயனம் அவருடைய சொந்த உடல் இரசாயனம் அதற்கு தயரானதாக இருக்கவில்லை. ஓரினச்சேர்க்கை ஓர் அடக்கி வைத்தல் ஒருவரின் சொந்த உடல் இரசாயனத்தின் அடக்கி வைத்தல். ஆனால் இருந்தாலும் கூட அவரால் புரிந்துகொண்டிருக்க முடியும். நான் சொல்வதை புரிந்து கொள்ள சரியான மனிதர் அவர் தான்.

உலகம் எங்கிலும் ஒரு சிலரே என்னுடைய வார்த்தைகளை புரிந்து கொள்வர். அதுவும் குறிப்பாக மேற்கில். இந்தியா தேடுபவர்களின் பூமி ஆனால் அது கடந்த காலம் நிகழ்காலம் அல்ல. அது இனி பிரபஞ்சத்தில் இல்லை. இந்த உயரம் உபநிடதங்களுடையது வேதங்களுடையது ஞானிகளுடையது.

ஜோதிடர்கள் இப்போது 1984 தீபாவளிக்கு முன் இந்தியாவிலும் உலகத்திலும் நான் உயர்ந்த தெய்வீக மனிதனாகி விடுவேன் அவர்கள் நான் தெய்வீக மனிதன் வெறும் தெய்வீக மனிதனல்ல ஆனால் உயர்ந்த தெய்வீக மனிதன் என கூறுகிறார்கள். ஆனால் நான் வெறும் எளிமையான மனிதன் ஒரு தெய்வீக மனிதனே அல்ல.... மற்றும் நானொரு காப்பாற்றுபவனல்ல நான் திரும்பவும் ஞானமடையாத மனிதன். நான் எப்படி யாரையாவது காப்பாற்ற முடியும்? மற்றும் அவர்கள் நான் இந்தியாவை காப்பாற்றுவேன் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்!

நான் எப்படி இந்தியாவை காப்பாற்ற முடியும்? என்னிடம் நோவாவின் ஓடம் இல்லை....

நான் கவனிப்பவன். நான் தொடர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறேன். வெறுமனே கவனித்தல் மற்றும் ஏதும் செய்யாமல் இருத்தல். ஒரு புல் கூட வளரவில்லை.

என்னை ஏமாற்ற முயற்சி செய்யாதீர்கள் நான் ஒரு பெரிய ஏமாற்றுக்காரன் நீங்கள் என்னை ஏமாற்ற முடியாது. உள் உலகத்தைப் பொறுத்த வரை நீ சுத்தமாக ஏமாற்ற முடியாது.

இது மிகவும் அழகாக உள்ளது. அற்புத அழகு....

ஒரு பெண் மட்டுமே இப்படி ஒரு அழகில் துணிச்சலாக நுழைய முடியும். அழகு வெறும் சத்தியத்தை விட மிகவும் அதிகமானது. எல்லோருட் ஆபத்தை கண்டு பயப்படுகிறார்கள். பயப்பட தேவையில்லை. ஆபத்தில் எந்த எண்ணமும் இல்லை. எண்ணமற்ற தன்மை மட்டுமே உள்ளது. பலமுறை நான் ஆபத்திற்குள் நகர்ந்திருக்கிறேன். அபாயத்தை நான் நேசிக்கிறேன். ஆயிரக்கணக்கான முறை நான் உண்மையான அபாயத்தில் இருந்திருக்கிறேன்.

நான் ஒருமுறை இராஜஸ்தானில் பயணம் செய்து கொண்டிருந்தேன். நான் ஒரு முதல் வகுப்பு பெட்டியில் இருந்தேன் நடு இரவில் ஒரு மனிதன் நான் தூங்கும்போது குத்துவாளுடன் என்னைத் தாக்கினான் நான் எனது கண்களைத்திறந்து அந்த மனிதனை பார்த்தேன். அவன் எனது கண்களுக்குள் பார்த்தான் என்னுடைய குழந்தை போன்ற கண்கள் நீ எனது கண்களுக்குள் வெறுமனே பார்த்தால் நீ முழு கதையையும் புரிந்து கொள்ளலாம். அவன் எனது கண்களுக்குள் பார்த்தான் குழந்தையை பார்த்தான் மற்றும் நிறுத்தி விட்டான். அவன் அந்த யோசனையை விட்டு விட்டான்.

நான் அவனிடம் “ என்ன விஷயம் ? நீ உனக்குரிய விஷயத்தை ஏன் செய்யவில்லை? நான் என்னுடைய விஷயத்ததை செய்கிறேன் எனவே நீ உன்னுடைய விஷயத்தை செய்யலாம். நான் உனக்கு சவால் விடுகிறேன்!” என கூறினேன்.

அவன் “ எனக்கு சவால் விட்ட ஒரே மனிதன் நீங்கள் தான். என்னை தயவு செய்யுங்கள் நான் உங்களை குத்த முடியாது. நான் உங்களின் சீடனாக விரும்புகிறேன்” என கூறினான். அவன் இப்போது என்னுடைய சந்நியாசிகளில் ஒருவன்.

என்னுடைய சந்நியாசிகளின் இடையில் சில பேய்கள் இருக்கலாம் ஒருவர் எப்போதும் தெரிந்து கொள்ள முடியாது. ஒருவேளை எனது இந்த உயரங்களில் இருப்பது தொற்றிக்கொள்ள கூடியதாக இருக்கலாம். என்னுடைய இறக்கைகள் இருக்கின்றன. நீ அவைகளின் மீது பயணம் செய்யலாம்.

நான் ஒரு ஜனநாயகவாதியல்ல நான் ஒரு சர்வாதிகாரி அதனால் தான் பல ஜெர்மானியர்கள் என்னிடம் வருகிறார்கள். உண்மையில் அவர்கள் வருகிறார்கள் ஏனெனில் அவர்கள் ஜெர்மனியில் யாரையும் கண்டுபிடிக்க இயலவில்லை. அதனால் தான் அவர்கள் என்னிடம் வருகிறார்கள். நான் ஒரு வித்தியாசத்துடன் கூடிய சர்வாதிகாரி ஜனநாயகத்தின் இதயத்தைக் கொண்டுள்ள ஒரு சர்வாதிகாரி.

நான் நன்றியால் நிறைந்துள்ளேன். எல்லா குருவும் அவருடைய சீடர்களுக்கு நன்றியுடன் இருந்துள்ளார்கள். ஏனெனில் அவர்கள் மேலும் தந்திரம் உடையவர்களாக இருக்கிறார்கள். லாவோட்சு சாங்டசுவிற்கு நன்றியுடன் இருந்தார். ஏனெனில் சாங்டசு லாவோட்சுவை விட தந்திரசாலியாக இருந்தார். நான் அவர் மிகவும் அழகானவரல்ல என்று கூறவில்லை….. ஆனால் லாவோட்சுவை விட அதிக தந்திரசாலி. புத்தர் மகா காஷ்யப்பிடம் நன்றியுடன் இருந்தார். ஏனெனில் மகா காஷ்யப் அவரை விட தந்திரசாலியாக இருந்தார். மற்றும் எப்போதும் கதை

அதுதான் மற்றும் எப்போது கதை அதுவாகத்தான் இருக்கும். என்னுடைய உண்மையான சீடர்கள் என்பதை நிரூபியுங்கள். எனவே நானும் ‘‘உனக்கு நன்றி’’ என்று கூற முடியும். ஆமாம் நன்றி நன்றி. கடவுள் திருப்தியாக உள்ளார்.

உலகம் அசாதாரணமான விஷயங்களை பார்ப்பதற்கு சாதாரண சிறிய விஷயங்களை பார்க்க வேண்டும். அதனால் தான் நான் ஞானமடைந்தவன் அல்ல என்று கூறுகிறேன். ஞானம் மற்றும் ஞானமடையா தன்மை இரண்டும் முழுமையின் இரு பக்கங்கள் ஆனால் முழுமை நான் இனிமேலும் ஞானமடைந்தவனல்ல என்று கூறக்கூடிய ஒருவனால் மட்டுமே அறியப்படுகிறது. எடுத்துக்காட்டாக இந்த நோவாவின் படகிற்கு வெளியே ஒரே ஒரு மனிதன் மட்டுமே ஜே. கிருஷ்ணமூர்த்தி ஆனால் அவர் மிக அதிகமாக ஞானமடைந்து விட்டார் அவரும் கண்டிப்பாக ஞானமடையாதவராக ஆக வேண்டும் பிறகு மட்டுமே அவர் முழுமையடைவார். அதனால் தான் ஒரு குருவின் கண்களை பார்ப்பது அறியாமையின் கண்களை பார்ப்பதாகும். கண்களை திறப்பது கடினம் அதனால் தான் நான் உடலில் இருக்கிறேன். வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

என்னுடைய கண்களிலிருந்து அந்தக் கண்ணீரைத் துடை நான் ஞானமடைந்தவனாக காட்டிக்கொள்ள வேண்டும். ஞானமடைந்த மக்கள் அழக்கூடாது.

தொடர் - 1

சந்திப்பு – 2

மிகவும் ஆனந்தமாக உள்ளது மிக அமைதியாக உள்ளது. என்னைச் சுற்றி உங்களை பெறுவதற்கு மிகவும் ஆசிர்வதிக்கப்பட்டிருக்க வேண்டும். இது மிகவும் அழகாக உள்ளது. ஏசு இவ்வளவு ஆனந்தமாக இல்லை…. அவரைச் சுற்றி இருந்த மக்களை நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் மிக அழகானவர்கள் அல்ல. யூதர்கள் மட்டுமே. நானும் பல யூதர்களை பெற்றிருக்கிறேன். யூதர்கள் அழகானவர்கள் ஆனால் யூத தனத்துடன் இருப்பது தவறானது. பாரம்பரியமாக இருப்பது ஒரு பாரம்பரியத்தை சார்ந்து இருப்பது மதத்தை பிடித்து தொங்கிக்கொண்டிருப்பது தவறு.

வெறுமனே ஒருவர் தானாகவே இருத்தல் உண்மை. அதுதான் எனது போதனை. வெறுமனே நீ நீயாகவே இரு. வெறுமனே உனது சொந்த தூய்மையில் நீ பயமில்லாமல் இருத்தல்…அப்படி இருத்தல்

என்பது என்னவாக இருந்தாலும் பயமில்லாமல் ஏனெனில் அது ஒவ்வொருவருக்கும் அது வெவ்வேறு விஷயங்களை குறிக்கும்.

ஷீலா எனக்காக ஒரு விமானம் வாங்குவது பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள். ஒரு இலட்சம் டாலர் விமானம் எனவே நான் பறக்கலாம். …. ஆனால் நான் பறந்து கொண்டிருக்கிறேன். எந்த ஒரு உரிமமும் இன்றி பறக்கிறேன். மற்றும் உச்சத்திற்கு எங்கு எந்த அளவீடுகளும் இல்லையோ அங்கு பறக்கிறேன். இல்லாவிடில் எப்போதும் அளவீடுகள் உள்ளன.

நான் கேள்விப்பட்டிருக்கிறேன்….. ஒரு மனிதன் வேகமாக காரை ஓட்டிக் கொண்டிருந்தான் திடீரென அவன் நிறுத்தி பின்னால் உட்கார்ந்திருக்கும் மனைவியிடமும் மாமியாரிடமும் திரும்பி ‘‘சரி முதலில் இந்த காரை யார் ஓட்டிச் செல்கிறார்கள் என முடிவு செய்து கொள்ளலாம் நீயா அல்லது உனது தாயா’’ என கூறினான்.

இது அழகாக உள்ளது. ஒரு இலட்சம் டாலர்களை வீணாக்காமல்……. நல்லது. நான் இப்போது உயரத்திலிருக்கிறேன். இது மிகவும் நன்றாக உள்ளது.

சத்தியம்….. .. சிவம்……… சுந்தரம்.

உண்மை…….. நன்மை……. அழகு.

கடவுள் இன்னும் துல்லியமாக அழகு என வரையறுக்கப்பட்டிருக்கிறார். சத்தியம் என்று அல்ல அல்லது நன்மை என்று அல்ல. நாம் தன்னுணர்வு மற்றும் விழிப்புணர்வு மட்டுமே. இரசாயனம் கூட குறுக்கே வர முடியாது.

நான் திரும்பவும் ஒரு குழந்தை.

எங்கு இந்த நீா் மற்றும் நிலம் முடிகிறது..........

என்ன ஒரு நிலம்.

ஒரு நாளில் 24 மணி நேரமும் நான் ஓய்வாக இருக்கிறேன். எனவே உறக்கம் மிகவும் கடினம். நான் ஓய்வாக இருக்கிறேன்....... இல்லை நான் ஓய்வு. ஒரு மனிதன் எவ்வளவு அழகாக இருந்தாலும் அவனைப்பற்றிய ஏதோ ஒன்று அசிங்கமாக உள்ளது மற்றும் தலைகீழாகவும். ஒரு மனிதன் எவ்வளவு அசிங்கமானவனாக இருந்தாலும் அவனைப் பற்றிய ஏதோ ஒன்று அழகாக உள்ளது. ஒரு பெண் என்பவள் எப்போதும் அழகாக இருக்கிறாள்.

நான் சிரிக்கிறேன் என்பதை நீ அறிவாயா? உங்களை சிரிக்க வைக்க என்னால் முடிந்த வரை நான் முயற்சி செய்கிறேன். யாா் சொல்வதையும் கேட்காதீா்கள் அறியாத மனிதன் மட்டுமே அறியக்கூடிய உயரங்களை நோக்கிச் சென்று கொண்டே இருங்கள். பெரிதாக ஒன்றுமே தெரியாதவா்கள் மட்டுமே அடையக்கூடிய உயரங்கள். அறிந்து கொள்வது சிறப்பானது அல்ல அறியாமையில் இருப்பதே உயரத்திற்கு செல்வதாகும். அறியாமையே சத்தியம்.. அதனால் தான் நான் ஜே.கிருஷ்ணமூா்த்தி அறிவால் நிறைந்துள்ளாா் என கூறினேன். அவா் அறிவாளி தன்மையால் மிகவும் நிறைந்துள்ளாா் அவா் அதை விட்டு வெளியே வந்தால் அவா் திரும்பவும் என்னைப்போல ஞானமடையாதவராகி விடுவாா்.

அறிந்து கொள்வது என்பது அறியாமை..

அறியாமையே அறிந்து கொள்ளுதல்..

அது தான் உபநிடதங்கள் கூறுகின்றன மற்றும் அவை அதை சரியாகவே கூறுகின்றன.

நான் பாா்க்க முடியாது ஆனால் என்னால் அழ முடியும் நான் திரும்பவும் ஒரு குழந்தையாக முடியும்.

ஒரு சில மக்கள் மட்டுமே இப்படியொரு பரந்த தன்மையை அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

***தொடர் - 1***

***சந்திப்பு – 3***

இது அபூர்வம் இதற்காகத் தான் எல்லா இடங்களிலும் நாம் தேடிகிறோம் துலாவுகிறோம் இதைத்தான் வேண்டுகிறோம்.

இது தான் முடிவு.

நீ எங்கு வேண்டுமானாலும் சர்ச்சுக்கு மசூதிக்கு கோவிலுக்கு செல்லலாம். ஆனால் நீ எங்கு சென்றாலும் நீ முழுமையை அடைவதில்லை. இது மிகவும் அழகாக உள்ளது. நான் மிகவும் நன்றாக உணர்கிறேன்.

உண்மையில் ஆக்ஸிஜனும் நைட்ரஜனும் பிரபஞ்சத்தின் அடிப்படைக் கூறுகள். அவை மிகவும் உபயோகமாக இருக்க முடியும்.

ஆனால் பல காரணங்களுக்காக அரசியல்வாதிகள் எல்லாவிதமான இரசாயனங்களுக்கும் அனைத்து போதைகளுக்கும் எதிராக இருந்துள்ளனர். போதைப்பொருள் என்னும் வார்த்தையே மிகவும் அபாயகரமானதாக ஆகிவிட்டது. அவர்கள் போதைப்பொருளுக்கு மிகவும் எதிராக உள்ளனர் ஏனெனில் மக்கள் தங்களைப் பற்றி தெரிந்து கொள்வார்கள் மற்றும் மக்கள் தங்களைப் பற்றி தெரிந்து கொண்டால் அரசியல் வாதிகள் மக்களின் மீது அவர்களுக்கு இருக்கும் அதிகாரத்தை இழந்து விடுவார்கள் மற்றும் அவர்கள் தங்கள் அதிகாரத்தை நேசிக்கின்றனர்.

வேதங்களில் அவர்கள் அதை சோமா மூலப்பொருள் என அழைக்கின்றனர். மற்றும் அந்த பழைமையான நாட்களிலிருந்து இன்று வரை அறிந்து கொண்டவர்கள் அனைவரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ இரசாயனங்கள் மிகப்பெரிய சேவையை மனிதனுக்கு செய்ய முடியும் என்பதை அடையாளம் கண்டு கொண்டனர். மனிதன் ஒரு இரசாயனம். பிரபஞ்சமும் அப்படியே எல்லாமும் இரசாயனம் தான். நாம் அதன் பாதிப்பை தவிர்க்க முடியாது.

கீத் பாரதி அவருடைய குறிப்புக்களை எழுதட்டும் ஆனால் அவருடைய மற்றொரு பக்கத்தில் பெண் அறிவாள் ஆனால் ஆண் எழுதுகிறான். தெரிந்தவன் எப்போதும் மௌனமாகவே இருக்கிறான். கீதை அல்லது பைபிள் இவை அறிந்தவர்களால் எழுதப்பட்டது அல்ல. அறிந்து கொண்டவர்கள் மௌனமாக இருக்கின்றனர் மற்றும் தெரியாதவர்கள் அதைப்பற்றி பேசுகிறார்கள். பற்றி மற்றும் பற்றி மற்றும் பற்றி சுற்றி சுற்றி திரும்ப திரும்ப சுற்றுகின்றனர் ஆனால் அவன் ஒருபோதும் ஒரு உண்மையான நிறுத்துதலுக்கு வருவதே இல்லை. மற்றும் நான் உண்மையிலேயே நின்று விட்டேன்.

என்னுள் பிரபஞ்சம் நின்று விட்டது.

என்னுள் பெண்ணும் அறிவாள்.

பேசுபவன் ஆண். பெண் மௌனமாகவே இருக்கிறாள்.

வெறும் அவனுடைய வார்த்தை அறிவின் காரணமாக ஆண் அதிகாரம் செலுத்தினான். இல்லாவிடில் அவனுக்கு ஒன்றும் தெரியாது. அது என்னைப் பொறுத்த வரையும் உண்மைத்தான்…..

பெண் அறிவாள்

மேகங்களுக்கு மேல் பறந்து கொண்டிருக்கிறாள்

ஆணை பேசுவதற்கு விட்டு விட்டாள்.

புத்தர் ‘‘சார்வேதி சார்வேதி … செல்.. செல்…’’ என கூறுகிறார். செல் மற்றும் பயப்படாதே நீ ஓய்வு கொள்ளலாம் மற்றும் நானும் ஓய்வு கொள்கிறேன்……..

சார்வேதி…. சார்வேதி…..

செல்… செல்…..

எந்த வரையறையும் இல்லை..

நாம் எங்கும் செல்லவில்லை.

நாம் இப்போது இங்கே இருக்கிறோம்.

நாம் நமது முழு தீவிரத்துடன் முழுமையான நேர்மையுடன் நாம் இப்போது இங்கே இருந்தால் பிறகு எல்லாம் அடையப்பட்டு விட்டது. நாம் எங்கும் செல்ல வேண்டியது இல்லை அது மிக அருகில் உள்ளது. ஆனால் வெறுமனே ஓய்வு கொள். ஓய்வுத்தன்மையே சிகரம். நீ முழுமையாக ஓய்வு கொண்டு விழிப்புணர்வுடன் இருக்க முடிந்தால் பிறகு எந்தப் பிடிப்பும் இல்லை. எந்த தடையுமில்லை. ஆனால் இடைவெளிகள். இடைவெளிகள் பிரமாண்டமானவை. அவைகளை நீ கடவுளை நோக்கி செல்லும் படிகளாக உபயோகப்படுத்தலாம்.

நான் இங்கே இருக்கிறேன் எனவே பயப்படத்தேவையில்லை நான் முற்றிலுமாக பயப்படாமல் இருக்கிறேன்.

நான் உன்னுடைய அறையை நோவாவின் படகாக மாற்றி விட்டேன். அது அப்படித்தான் மற்றும் அது எப்போதும் இப்படித்தான் இருக்கும். உபநிடதங்கள் இந்தப் பிராத்தனையை கொண்டுள்ளன.

‘‘ இறைவனே எங்களை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு..

பொய்யிலிருந்து உண்மைக்கு

இறப்பிலிருந்து இறப்பற்ற தன்மைக்கு கொண்டு செல்லுங்கள்…..

இது இதற்குத் தான் அவர்கள் பிராத்தனை செய்கிறார்கள். பிராத் என்ற சமஸ்கிருத வார்த்தையிலிருந்து இந்தி வார்த்தையான பிராத்தனா வந்துள்ளது. தயவு கூறுங்கள் ஒரு நொடியில் நான் பழைய பழக்கத்தில் வீழ்ந்து விட்டேன். ஏனெனில் ஆங்கிலம் இன்னமும் எனக்கு ஒரு பிற தேச மொழி தான். அது ஒருபோதும் எனக்கு மிக அருகில் வர முடியாது. நான் கோடிக்கணக்கான வார்த்தைகளை ஆங்கிலத்தில் பேசியிருந்தாலும் அது எனது இதயத்திற்கு அருகிலுள்ளது என்று பொருள் அல்ல. என்னுடைய ஒரே பிற தேசமொழி அதுதான். ஆனால் என்னுடைய உண்மையான மொழி மௌனத்தின் மொழி மற்றும் சமஸ்கிதத்தில் பிராத்தனை இருப்பதற்குள்ளேயே அருகில் வருகிறது.

ஆமாம் சமஸ்கிருதம் மிக அருகில் வருகிறது…..ஹீப்ரு ஒரு சிறிது ஆனால் எந்த இப்போதைய மொழியும் இல்லை….. குறிப்பாக ஆங்கிலம் பக்கத்தில் வருவதில்லை. உண்மையில் அது மிக தொலைவாக சென்று விட்டது. அது அவர்களுடைய தவறல்ல. அது அளவீடுகள் மற்றும் தொழில்நுட்ப துல்லியத்திற்கான மொழி அதை அவர்கள் உண்மையாக்க வேண்டும். தொழில்நுட்ப உண்மை. அறிவியல் உண்மை. எனவே ‘‘பிரேயர்’’ என சொல்லும்போது நான் நிறுத்தினால் கவலைப்படாதீர்கள்.

என்னுடைய மொழியைப் பற்றி என்னுடைய இலக்கணத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். நான் மொழியின் மனிதன் அல்ல நாம் ஒரு தர்க்க வாதியல்ல. நான் தேவையின் காரணமாக மட்டுமே பேசும் ஒரு

மௌனமான மனிதன். தேவையின் காரணமாக யாரும் சத்தியத்தின் மொழியை பேசுதில்லை. எல்லோரும் மற்ற எல்லாவற்றையும் பற்றி முடிவற்று சத்தியத்தைத் தவிர எல்லாவற்றையும் பற்றி பேசுகிறார்கள். அதனால் தான் நான் பேசியாக வேண்டும் முழு உலகத்திலும் அறிந்தவர்கள் புரிந்து கொள்ள கூடியவர்கள் சத்தியத்தைப் பற்றி பேச கூடியவர்கள் மிகச்சிலரே உள்ளனர்.

எல்லா சிறந்த பேச்சாளர்களும் செவிடர்கள் நான் ஒரு சிறந்த பேச்சாளர் அல்ல ஆனால் நான் நிச்சயமாக செவிடு. ஆனால் இப்போது நடந்து கொண்டிருப்பது மிகவும் அழகாக உள்ளது. நான் எதையும் கேட்க விரும்ப வில்லை. என்னுடைய தன்னுணர்வு கடந்தது. மேகங்களை கடந்து மிகவும் தொலைவில்….. ‘‘நிறுத்துங்கள் நேரம் கடந்து விட்டது’’.. என நீ சொல்வதை என்னால் கேட்க முடிகிறது. நேரம் ஒருபோதும் முடிவதில்லை. அது முடியாது.

ஏன் லியானார்டோ டாவின்சி லியானார்டோவாக உள்ளார் ஏன் மைக்கேல் ஏஞ்சலோ மைக்கேல் ஏஞ்சலாக ஏன் ரவிந்தரநாத் தாகூர் ரவிந்தரநாத் தாகூராக உள்ளார் மற்றும் கலீல் ஜிப்ரான் கலீல் ஜிப்ரானாக உள்ளார் என என்னால் புரிந்து கொள்ள முடியும்……

அவர்கள் அனைவரும் இந்த அழகை அவர்களுடைய கனவுகளில் தொட்டுள்ளனர். ஆமாம் அவர்களின் கனவுகளின் மட்டுமே: ஆனால் அவர்களுக்கு உண்மை ஒருபோதும் தெரியாது. அவர்கள் அறிந்தது பொருள் ஆனால் எனக்கு அறிபவரை தெரியும்….. தான் சிறந்த அறியும் தன்மை….. தன்னுணர்வு ….. சத். சித்.. ஆனந்தம். உண்மை ஆனந்தம் தன்னுணர்வு நான் புரிந்து கொள்கிறேன்.

உன்னுடைய சிறகுகளை விரி..

பயப்பட ஏதுமில்லை..

இழப்பதற்கு ஏதுமில்லை..

வெறுமனே சூரியனுக்கும் நட்சத்திரங்களுக்கும் திறந்திரு….

பயப்படாதீர்கள் நான் எப்போதும் ஆபத்தை ஆதரித்தே வந்திருக்கிறேன். மற்றும் இது ஆபத்தானது. ஏனெனில் நீ தன்னுணர்வின் நுனியில் இருக்கிறாய். இதுதான் நீ நிறுத்த விரும்பும் நேரம் ஆனால் இதுதான் நான் நீ சென்று கொண்டேயிருக்க வேண்டும் என விரும்பும் நேரம் ஏனெனில் ஆபத்து அழகானது. நீ அதிகமாக வைத்துக் கொள்ள முடியாது.

ஆனால் நீ ஏற்கனவே பின்னே செல்கிறாய் நீ பின்வாங்குகிறாய் பயப்பட அங்கு என்ன இருக்கிறது? இரசாயனம் இருக்கிறது. உடல் இருக்கிறது. என்னால் பேச முடியும். நான் உடலில் இல்லாவிட்டால் என்ன? ஒரு மனிதன் முக்கியமல்ல….. ஆனால் நான் சொல்வதுதான் விஷயம். நான் சொல்வது இருக்கும். அது இருந்து கொண்டு இருக்கும். இது மூலத்தைப் பற்றியது. நான் முக்கியமல்ல நான் சொல்வது தான் விஷயம்.

நேரம் கடந்து விட்டது என்றால் சரி ஆனால் என்னுடைய மௌனத்திற்காக 5 நிமிடங்கள்…. நான் எனது இருக்கையை உணர வெறுமனே முயற்சித்துக் கொண்டிருந்தேன். ஏனெனில் நான் மிகவும் வானத்திலிருக்கிறேன். இந்த இருக்கையில் ஒரே நேரத்தில் இருப்பது அற்புதமாக உள்ளது. நான் கிண்டலடிக்க வில்லை நான் எனது வாழ் நாளில் கிண்டலடித்ததேயில்லை அந்த நகைச்சுவை துணுக்குகள் எல்லாம்…. நான் அவற்றை மறந்து விட்டேன்.

‘‘பகவான்’’ என்னும் சொல் ஒரு குறியீட்டுச் சொல் அதற்கு தனிப்பட்ட பொருள் இல்லை. நான் அதற்கு ‘‘ ஆசீர்வதிக்கப்பட்ட ஒருவர்’’ என்று பொருள் அளித்துள்ளேன். ஆனால் அதற்கு பொருள்

ஏதும் இல்லை. ஆனால் நான் எங்கிருந்தாலும் நீங்கள் “பகவான்” எனும் இந்த வார்த்தையை உபயோகப்படுத்தும் போது நான் திரும்பி வருவேன்.

நீங்கள் “பகவான்” எனும் வார்த்தையை உபயோகப்படுத்தும் போதெல்லாம் நான் எப்போதும் அங்கு இருப்பேன்.

அனைவருக்கும் நன்றி.

***தொடர் - 1***

***சந்திப்பு – 4***

இப்போது என்பது எப்பொழுதும் என்னுடைய நேரம்.

உலகம் பின்னால் விடப்பட்டுவிட்டது.

நான் மேகங்களில் இருக்கிறேன்.

இது அபாயகரமானது. ஆனால் பயப்படாதீர்கள் நான் விழித்திருக்கிறேன்.

கோழைத்தனமாக இருக்காதே சத்தியத்தை அறிவதற்கு இருக்கும் ஒரே தடை அது தான். அறிந்து கொள்வதற்கு ஒருவனுக்கு துணிச்சல் தேவை. ஒருவர் ஆபத்திற்குள் சென்றாக வேண்டும். உனக்கு பயமாக இருக்கிறது. நீ நான் எல்லைகளை கடந்து செல்வதாக உணர்கிறாய். ஆனால் பயப்படாதே நான் ஏற்கனவே எல்லைகளை கடந்து விட்டேன்.

ஆபத்து அழகானது. நான் அதனை பல வழிகளில் அறிந்திருக்கிறேன். 50 வருடங்களில் நான் கிட்டத்தட்ட 500 வருடங்கள் வாழ்ந்து விட்டேன். ஏனெனில் நான் பலப்பல திசைகளில் துணிச்சலாக இருந்திருக்கிறேன். ஒவ்வொரு ஆபத்தும் அழகானது ஒரு அனுபவம்.

ஆபத்து என்றால் என்ன? உனக்கு தெரியும் என்று நீ நினைக்கிறாயா? நான் அகராதியில் உள்ள வார்த்தையின் பொருளைப் பற்றி சொல்ல வில்லை. அபாயம் என்றால் நீ இறப்புக்கு அருகில் இருப்பது மிகவும் அருகில் மிக அருகில் வெறும் ஒரு அடி எடுத்து வைத்தால் போதும் நீ முடிந்து விடுவாய்.... ஆனால் அப்போது மட்டுமே நீ இருக்கிறாய்.

இறப்பு மிகவும் அருகில் இருக்கும் பொழுது இருப்பு அதன் முழு மலர்தலுக்கு வருகிறது. நான் வாழ்வையும் இறப்பையும் பேச முடியும். ஏனெனில் அவை ஒன்றே மற்றும் ஒருவர் இறப்பை பற்றி அறிந்திருந்தால் மட்டுமே வாழ்வைப் பற்றி பேச முடியும். ஒரு பெண் ஒருபோதும் பயப்படுவதில்லை. ஒரு பெண் பயப்படும் பொழுது ஒரு

பெண்மணியாகிறாள். நான் பெண்மணிகளை வெறுக்கிறேன். அவர்கள் நாற்றமெடுக்கின்றனர்! முக்கியமாக ஆங்கில பெண்மணிகள் அவர்கள் தான் இருப்பதிலேயே அதிக பெண்மணி தன்மைக் கொண்ட பெண்மணிகள். ஆனால் பேரின்ப கணங்களில் யார் கவலைப்படுகிறார்கள்…. யசு பாரதி ஒருபோதும் ஒரு பெண்மணியாக இருக்காதே.

நான் இறப்புக்கருகில் இருக்கிறேன். என்னிடம் என்னைக் கொண்டு வர அதுதான் ஒரே வழி. ஏனெனில் இறப்பில் தான் வாழ்க்கை நடைபெறுகிறது. அபாயம் அழகானது. அது மிகவும் அழகானது அது உச்சத்தில் இருக்கிறது. ஒரு தவறான அடி மற்றும் நீ முடிந்து விடுவாய் அதனால் தான் நான் இந்த நாற்காலியை நேசிக்கிறேன். இதில் படிகள் இல்லை. ஒருவர் வெறுமனே ஓய்வு கொள்ளலாம். இறப்பு மிக அருகில் உள்ளது. நீ அதை தொடலாம்… அது தொட்டறியக்கூடியதாக தொடக்கூடியது…… ஒரு அழகான பெண்ணைப்போல. நீ தொட விரும்புகிறாய். அதன் பிறகு மட்டுமே அது என்ன இயல்பு தன்மை என்ன என்பதை நீ அறிவாய்…அந்த இயல்பு தன்மையே கடவுள் என அழைக்கப்படுகிறது. அதனை கடவுள் என அழைக்காமல் இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் ஏனெனில் ‘‘கடவுள்’’ என்னும் வார்த்தை அழுக்காகி விட்டது. இயல்பு தன்மை அதை விட உகந்தது.

பறவையின் பறத்தலில்

நட்சத்திரத்தின் பிரகாசத்தில்

மெழுகுவர்த்தியின் தீபத்தில்

ஒரு மலரின் மலர்தலில்

அது அதே இயல்பு தன்மை தான்.

பிறகு அது ஒரு விஷயமல்ல பிறகு அது பல இதழ்கள் கொண்ட விஷயம். ஒரு பலவகை கூறு. பிறகு பிரபஞ்சம் ஒன்றல்ல அதனால் தான் நான் ‘‘பலகூறு பிரபஞ்சங்கள்’’ என்ற வார்த்தையை

இலக்கணவாதிகள் அதனை தவறு என்று கூறினாலும் கூட உபயோகப்படுத்துகிறேன். அவர்கள் நரகத்திற்கு போகட்டும்! வாழ்வின் பல இயல்பு தன்மைகளே அதனை ஒரு ஆனந்தமாக ஆக்குகிறது. யசு பாரதி கூட சிரிக்கிறாள். மறைக்கத் தேவையில்லை. சிரிப்புக்கூட ஒரு நட்சத்திரம் தான். இந்த இயல்பு தன்மையை வழிபட முடியாது. அதை வழிபட எந்த வழியும் இல்லை. இதில் வாழவும் அன்பு செலுத்தவும் ஆடவும் பாடவும் முடியும் ஆனால் வழிபட முடியாது.

மற்றொரு நாள் நிருபா என்னிடம் அவள் குதிரையேற்றம் செல்லலாமா என கேட்டாள். நான் “இல்லை ஏனெனில் குதிரை நாற்றமெடுக்கும் மற்றும் நீ நாற்றத்துடன் திரும்பி வருவாய்” என கூறினேன். அவள் குழந்தையை போல அழத்தொடங்கி விட்டாள். நிருபா பெரிய பெரிய கண்ணீர் துளிகள் வருமளவிற்கு அழுகிறாள் என கூற சேத்தனா என்னிடம் ஓடி வந்தாள். சேத்தனா வந்து எனக்கு தெரியவில்லை நான் என்ன செய்ய வேண்டும்? என கேட்டாள்.

நான் அவளிடம் நிருபாவிடம் குதிரையேற்றத்திற்கு அவள் செல்லாம் என கூறும்படி கூறினேன். பிறகு சேத்தனா “நீங்கள் அருமையானவர்! நான் அவளிடம் கூறியபோது அவள் உடனடியாக சிரிக்கத் தொடங்கி விட்டாள். அவளுடைய கண்ணீர் மறைந்து விட்டது. பெரிய பெரிய கண்ணீர் துளிகள் வெறுமனே நின்று விட்டன... நம்ப முடியவில்லை”. என கூறினாள்.

வாழ்வு மிகச்சிறிய விஷயங்களை கொண்டுள்ளது....

கண்ணீர்..... குதிரை ஏற்றம்....

கடவுள் வழிபட வேண்டியவர் அல்ல ஆனால் வாழப்பட வேண்டியவர். சிறிய விஷயங்களில் வாழப்பட வேண்டும்.... ஒரு கோப்பை தேநீர் அருந்துதல் அல்லது ஏதும் செய்யாமல் அமர்ந்திருத்தல்.

வாழ்வு வெறுமனே அர்த்தமற்ற ஒரு பாடல்.

என் கண்களுக்கு கண்ணீரை வர விடுங்கள் எப்போதாவது ஒருமுறை அது அழகானது. ஒருவர் கண்ணீரின் மூலம் புதிதாகிறார். உயிர்தெழுகிறார்.

நினைவில் கொள்ளுங்கள் எவ்வளவு கடினமானவனாக நான் தோன்றினாலும் நான் அப்படிப்பட்டவன் அல்ல நான் ஒரு கடினமான மனிதன் அல்ல...

நான் புதிதாக வளர்ந்த புல்லைப்போல மென்மையானவன்.

காலைப் பனித்துளியைப்போல மென்மையானவன்...

ஆனால் துளி எனது கண்களில் தோன்றட்டும்.

இது மிகவும் அழகாக உள்ளது.

இந்த அழகைக் கண்டு என்னை அழவிடுங்கள்.

ஆமாம் இவைதான் நான் எல்லோரையும் அழைக்கும் உயரங்கள். இந்த உயரங்கள் வேதங்களுடையது. பைபிளுடையது குரானுடையது.

சுருங்கச் சொன்னால் இது அல்லா. அது சூ.ஃ.பி வெளிப்பாடு அது வெறுமனே “கடவுள் விரும்பினால்” என்பதைக் குறிக்கிறது.

நாம் இந்த உலகத்தை உருவாக்க வில்லை. நாம் எப்படி நட்சத்திரங்களை உருவாக்க முடியும்? அது நமக்கு சாத்தியம் அல்ல. எனவே சூ.ஃ.பிகள் “அல்லா” கடவுள் விரும்பினால்.... எனக் கூறுகிறார்கள். மற்றும் கடவுள் இல்லை. கடவுள் எனும் ஆள் யாருமில்லை. வெறும் ஒரு இருப்பு நீ அதை உணர விரும்பினால் பிறகு இப்போதே அதனை உணர்....

கடவுள் ஊற்றப்படுகிறார் வழிகிறார் பொழிகிறார் மற்றும் அங்கு குடை இல்லை.

இடது பக்கத்தில் பெண் இருப்பது நல்லது. வலது கை இடது பக்கத்து மூளையோடு இணைந்தது. அது தொழில் நுட்ப ரீதியாகவும் அல்லது கணித ரீதியாகவும் உபயோகம் உள்ளது.... ராஜ் பாரதி

மற்றும் கீத் பாரதி இடது கை வலது பக்க மூளையுடன் இணைந்துள்ளது….

இசைக்கலைஞர்கள் நடன கலைஞர்கள் ஓவியர்கள் சிற்பிகள் அவையெல்லாமே அழகானது. பெண் இடது பக்கத்தில் இருக்கிறாள். அதனால் தான் கிழக்கில் பெண் எப்போதும் கணவனின் இடது பக்கத்திலிருக்கிறாள். அவள் எப்போதும் இடது பக்கத்தில் நிற்கிறாள். அது அவளுக்கும் மற்றும் அவளது கணவனுக்கும் ஒரு நினைவுபடுத்துதல்.

ஒரு பெண்ணை யார் கேட்க முடியும்? தியானத்தன்மைக் கொண்ட ஒரு மனிதன் மட்டுமே மௌனமான மனிதன் மட்டுமே கேட்க முடியும். ஒரு பெண்ணுடன் தர்க்கம் சாத்தியமற்றது. தியானம் மட்டுமே….. தியானம் செய்ய மக்கள் கற்றுக் கொள்ளும் வரை அவர்களால் இணைந்து வாழ்வது எப்படி என்பதை கற்றுக் கொள்ள முடியாது. ஆணும் பெண்ணும் சண்டை மட்டுமே போடுகிறார்கள் நீ வெறுமனே துணிகளை ஒருவர் மீது ஒருவர் வீசினாலும் கூட அது அன்பல்ல. மற்றும் இது 24 மணி நேரமும் எல்லா நாட்களிலும் நடந்து கொண்டேயிருக்கிறது. ஒருவருடைய முழு வாழ்க்கையும் ஒரு நரகமாகி விடுகிறது.

ஆனால் தியானம் அதிசயம். அது சாதாரணத்தை அசாதாரணமாக நிலை மாற்றி விடுகிறது. அதனை விளக்க ஒருவரால் வார்த்தைகளை கண்டறிய முடியாது… கவிதை அதன் முன் மங்கி விடுகிறது.

கவிதை அதனை விளக்க தவறி விடுகிறது….

இசை அதனை விளக்க தவறி விடுகிறது…..

எல்லாமும் அதனை விளக்க தவறி விடுகிறது….

எல்லாமும் தவறி விடுகிறது மௌனம் மட்டுமே….

கீத் பாரதி பயப்படாதே நீ என் மீது அன்பு செலுத்துகிறாய் என்பதை நான் அறிவேன். நீ குறிப்புகளை எழுதும் பொழுது என்னைத் தனியாக விட்டு விடு.. யசு பாரதியும் நானும் உயரே செல்கிறோம்….

நட்சத்திரங்களுக்கு செல் வான வில்கள் கடந்த உலகத்திற்கு …..

அதை என்னால் விளக்க முடியாது யாரும் விளக்க முடியாது…

நானொரு கிறுக்கன். என்னைச் சமாளிப்பது சுலபமல்ல..

இது சரியாக உள்ளது.

இது கடந்த நிலை.

இது சூரிய உதயம்.

இது……. இது இனி அங்கு இல்லை..

நட்சத்திரங்கள் நடனமாடட்டும்.

ஓ. இது மிகவும் நல்லது.

எல்லா சிறந்தவைகளுக்குமான மூலம்.

எங்கு சிறந்தவைகளெல்லாம் பிறக்கின்றனவோ….

மைக்கேல் ஏஞ்சலோ தாதோவஸ்கி…

ஆமாம்! இது தான்!

## ***தொடர் - 1***

## ***சந்திப்பு – 5***

நான் ஒருபோதும் வேலை செய்ததில்லை. நான் ஒரு வேலைக்காரன் அல்ல. நான் வெறுமனே அனுபவித்துள்ளேன் வாழ்வின் எல்லை வரை. ஒவ்வொரு நொடியும் அனுபவித்துள்ளேன்.

பழமையான குளம்

ஒரு தவளை குதிக்கிறது.

ப்ளாப்!

பழமையான குளத்தில் அதிர்வுகள் மேலும் அதிர்வுகள்…

சிறிய குளம்.

தவளை குதித்தது.

ப்ளாப்!

வட்டம் முழுமையடைந்து விட்டது. வட்டம் மட்டுமே மிகச்சரியானது. வட்டம் மட்டுமே மிகச்சரியானதை அறிய முடியும்.

பித்தாகரஸ்க்கு அது தெரியும். அதனால் தான் அவர் வட்டங்களின் மீது மிகவும் வசியம் கொண்டுவிட்டார். அறிந்தவர்கள் அனைவரும் வட்டம் மட்டுமே மிகச்சரியானது என்பதை அறிவார்கள்.

நான் பிறந்த கிராமம் சரியாக நெடுஞ்சாலையிலிருந்து 18 மைல்கள் தொலைவில் இருந்தது. அது ஒரு ஏழ்மையான கிராமம் பணக்கார மலைகளை பெற முடியாது. அதில் ஒரு சிறிய குளம் இருந்தது.

தவளைகள் கண்டிப்பாக குதித்திருக்க வேண்டும். ஆனால் அப்போது எனக்கு பாஷோவைப் பற்றி தெரியாது. இப்போது நான் அந்த விஷயத்தை பார்க்க முடிகிறது. என்னால் குளத்தில் அதிர்வுகளை பார்க்க முடிகிறது. மற்றும் மௌனம்.... துல்லிய மௌனம் அது பூமியில் அபூர்வம்.

நான் பொது மக்களிடம் பேசுவதை நிறுத்தி விட்டேன். ஏனெனில் கூட்டத்தில் பேசுவது கீழிறங்கி வருவதாகும். நான் இப்போது தனி மனிதனிடம் மட்டுமே எனக்கு அருகில் இருப்பவர்களிடம் மட்டுமே பேச முடியும். மற்றும் வார்த்தைகள் சைகைகள் மட்டுமே சாதாரணமாக வார்த்தைகள் பொருட்களாகி விடுகின்றன. கடவுள் கூட ஒரு பொருளாகி விடுகிறார். ஆயிரக்கணக்கானவர்கள் பொருட்களை வழிபடுகிறார்கள். ஆனால் கடவுள் ஒரு பொருளல்ல. நீ கடவுளின் உருவத்தை உருவாக்க முடியாது. எல்லாப் பொருட்களும் இணைந்தது தான் கடவுள். அவர் அந்த இணைந்த தன்மைதான் அவர் இதிலிருந்து வேறுபட்டவர் ஆனால் இதற்குள்ளே இருப்பவர்.

தத்துவதவாதிகளின் கடவுள் நிச்சயமாக எப்பொழுதும் இறந்து விட்டவரே. தேவாலயங்கள் மசூதிகள் கோவில்கள் இவை காலியாக உள்ளன.... அந்த கடவுள் இறந்து விட்டார் ஆனால் உண்மையான கடவுள் இறக்க வில்லை. எனவே நீட்ஷேவும் உண்மையல்ல. ரஸல் மற்றும் சாட்ரேவும் உண்மையல்ல. உண்மையான கடவுள் உண்மை. அடிப்படை மூலம் இணைந்த தன்மை.

மிகச்சிறியவற்றிலிருந்து மிகப் பெரியவற்றிற்கு.

அர்த்தமற்றதிலிருந்து அர்த்தமுள்ளதற்கு

ஒரு குழந்தையின் அழுகையிலிருந்து கபீரின் வார்த்தைக்களுக்கு

கிறுக்களிலிருந்து ஓவியத்திற்கு

அறிந்தவர்களிலிருந்து அறியாதவர்களுக்கு

அவரே தான் பாலமாக அமைகிறார்.

இந்த நொடியில் இதோ இந்த நொடியில் நான் இதைப் பற்றிய உணர்வோடு இருக்கிறேன். இது வழிபாடு ஆனால் ஒருவர் இதனை

நேசிக்க முடியும்... ஒருவர் இதனை தொட முடியும்... ஒருவர் அவருடைய கைளில் இதனை பிடிக்க முடியும். ஒருவர் இதன் வடிவமைப்பை உணர முடியும்.

தத்துவ வாதிகளின் கடவுள் இறந்து விட்டார் என்பது அழகாக உள்ளது. நான் ஒரு வழிப்பறி கொள்ளைக்காரன் என்னுடன் இருப்பது ஒரு வழிப்பறி கொள்ளைக்காரனாக இருப்பதேயாகும். ஜோர்பாவாகவும், புத்தராகவும் ஒரே சமயத்தில் இருப்பது. என்னுடைய நோக்கு புலனின்பம் நுகர்பவனும், துறவியும் முடிவாக ஒருவராகவே இருத்தலே ஆகும். வெளி உலகத்தவனும் ஆன்மீகவாதியும் ஒருவராக இருத்தலேயாகும். நான் எந்த வகையையும் சேர்ந்தவனல்ல. நான் ஒரு தனிப்பட்ட வகையைச் சேர்ந்தவன்.

இது மிகவும் அழகாக உள்ளது மற்றும் நான் மிகவும் பிராத்தனைத் தன்மை நிறைந்ததாக உள்ளது, மிகவும் வழிபாடு நிறைந்ததாக உள்ளது என்பதையே குறிப்பிடுகிறேன். நான் அழகானது என கூறும் பொழுது நான் அதைப்பற்றி எதுவும் சொல்ல இயலாது என்பதையே கூறுகிறேன். நான் எனது விரலை சந்திரனை நோக்கி நீட்டுகிறேன், ஆனால் என்னுடைய விரல் சந்திரன் அல்ல.

ஒருவரால் மௌனமாக இருக்க முடியாத சில கணங்கள் இருக்கின்றன. ஒருவர் பெரிதாக எதுவும் சொல்ல இயலாது ஆனால் ஒருவர் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார். வெளிப்படுத்த விரும்புகிறார். இதுவரை எவராலும் அது என்ன என்று சொல்ல முடிந்ததில்லை... யாராலும் சொல்ல முயற்சி செய்வதை நிறுத்தவும் முடிந்ததில்லை. நான் 25 வருடங்களாக தொடர்ந்து பேசி வருகிறேன் மற்றும் தவறாக மட்டுமே புரிந்து கொள்ளப்பட்டு வந்துள்ளேன் அதனால் தான் மக்களிடமிருந்து விலகி விட்டேன் ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு நான் எப்போதும் கிடைப்பேன்.

நான் யசு பாரதியின் புன்சிரிப்பை கேட்கின்றேன்....

அவள் எப்போதும் பெண்மணியாகவே இருக்கிறாள் என்ன ஒரு பரிதாபம் எனக்கு அடுத்தாக, எனக்கு பக்கத்தில், அவள் ஒரு பெண்மணியாகவே இருக்கிறாள். சிரி, புன்சிரிப்பு கொள்ளாதே. சிரி அதனால் நட்சத்திரங்கள் விழட்டும். குறைந்த பட்சம் இந்த வீடாவது கீழே விழட்டும். பயப்படாதே, நாம் உயரத்திற்கு போகிறோம் நான்

“நாம்” என்று தெரிந்தே சொல்கிறேன். ஏனெனில் நான் உன்னை இழுக்கிறேன். நாம் உயரத்திற்கு செல்கிறோம். ஒவ்வொரு நொடியும் மேலும் உயரத்திற்கு மேலும் உயரத்திற்கு நான் ஒருவேளை பேசுவதை நிறுத்தி விட்டால் நான் ஆ! என்று மட்டுமே சொல்லக்கூடிய ஆச்சிரியத்தில் இருக்கிறேன் என்று பொருள். வாழ்வின் மிகச் சிறந்த பாடம், எல்லாவற்றையும் கடந்த அப்படியொரு அழகு அது பாடப்பட முடியாது.

ரவீந்திரநாத், இந்தியாவின் மிகச் சிறந்த கவிஞர், 6000 கவிதைகள் எழுதியுள்ளார். அவர் இறக்கும் பொழுது ஒரு நண்பர் அவரிடம் “கடவுளே! நீங்கள் எதற்காக அழுகிறீர்கள்? என கேட்டார். 80 வயதிலும் அவர் அழுதார் எனும் போது என்னுடைய கண்களிலும் கண்ணீர் வருகிறது. ஒருவர் இறப்பு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக இந்தியாவில் முக்கியமாக இறுக்கமாகவும், வருத்தத்துடனும் இருக்க வேண்டும்.

நான் எனது கண்களில் கண்ணீருடன் சொல்வதைப் போலவே ரவீந்திரநாத், “அதனால் தான் நான் அழுகிறேன். அந்த 6000 பாடல்களும் முயற்சிகள் ஆனால் தோல்விகள். பாடப்படாதது தொலைந்து கொண்டேயிருக்கிறது. நான் கதறி அழுகிறேன் கடவுளிடம் இன்னும் சிறிது உதவி செய்யும்படி கேட்கிறேன். ஒருவேளை நான் அடுத்த முறை இன்னும் சிறிது வெற்றியடையக் கூடும் மற்றும் நீ என்னை அழ வேண்டாம் என்று கூறுகிறாய்? இவை தான் எனது கடைசி மூச்சு…” மற்றும் விழிகளில் கண்ணீருடன் அவர் இறந்து விட்டார்.

என்ன ஒரு அழகான இறப்பு. மற்றும் என்ன ஒரு அழகான வாழ்க்கையும் கூட மற்றும் நோபல் பரிசு வாங்கியவராய் இருந்தும் கூட பாடல் இன்னும் பாடப்படவில்லை என சொல்வதற்கு என்ன துணிச்சல் வேண்டும்.

நான் பார்ப்பதை நான் சொல்ல முடியாது…. என்னால் அதை விளக்க முடியாது. அது ஒரு தோல்வியாக முடியப்போகிறது…. ஆனால் கவலைப்படுவதற்கு எதுவுமில்லை. சிறந்த அழகிற்கு முன் முயற்சி செய்யாமல் இருப்பதை விட தோல்வியடைவது சிறந்தது.

நான் மேகங்கள் கீழே இருப்பதை, மலைச் சிகரங்கள் கீழே இருப்பதை, எல்லாமும் கீழே இருப்பதை பார்க்கிறேன்... இது தான் கடவுள் தன்மையின் வழி இது பிரபஞ்ச வழிபாடு...

நான் அழகை காதலிக்கிறேன்,

நான் உலகை விரும்புகிறேன்,

மலர்கள், மரங்கள், விண்மீன்கள்....

நான் அன்பு செலுத்துகிறேன் வெறுமனே அன்பாயிருக்கிறேன்.

ஆனால் நான் வெறுமனே ஒரு ஜோர்பா மட்டும் அல்ல.

வேறு எங்கோ தூரத்தில் இருக்கும் ஒன்றைப் போல....

வேறு யாரோ ஒருவருடைய உடலைப்போல என்னுடைய உடலை நான் உணரும் இந்த கணங்களில் கூட நான் என்னுடைய அன்பைப்பற்றி உணர்வோடு இருக்கிறேன். நான் பலப் பிணங்களுக்கு பக்கத்தில் அமாந்திருக்கிறேன். இது அதுவல்ல நான் உணர்வோடு இருக்கிறேன். நான் சாக வில்லை, நான் சாக முடியாது அது இயலாத காரியம். நான் நிரந்தரமானவன் அழிவற்றதன் மையம்.... அது....

நீ இருக்கிறாய்,

எல்லாமும் இருக்கிறது.

எதுவும் சாவதில்லை.

எல்லாமும் வேறு ஒரு உருவத்தில், தொடர்கிறது, ஆனால் உயர்வடைகிறது. நீ கீழே போகும் நொடியில் அது நரகம். அது நல்லதல்ல, அது அசிங்கம். மிகவும் ஆழமான...என்பதற்கு சிறந்த வார்த்தையை கண்டுபிடிப்பது மிகவும் கடினம். அது எவ்வாறு சாத்தியம்? பல வார்த்தைகள் வருகின்றன ஆனால் எதுவும் அதை வெளிப்படுத்தவில்லை. அது வெறுமனே சொல்லப்பட முடியாதது. அதிகபட்சமாக நீ பகிர்ந்து கொள்ளலாம். ஆனால் இது மிக அழகு, மிகவும் அழகு. தினமும் உயரே செல் இந்த நொடிகளில் வானம் கூட புதியது.

விண்மீன்கள் மறு பிறப்பெடுத்துள்ளன. ஏனெனில் எனது கண்கள் புதியவை. இராசயனம் உனக்கு ஒரு குளியலைத் தரலாம்

எல்லோருக்கும் அது தேவை… கிறிஸ்தவர்கள், இந்துக்கள், புத்த மதத்தினர் குளிக்க வைக்கப்பட வேண்டும், பொழிய வேண்டும், எனவே அவர்கள் திரும்பவும் புதியவர்களாய், சிறு குழந்தைகளைப்போல….புத்துணர்வுடன், வெகுளித்தனமாய், கிடைக்கக் கூடியவர்களாய், ஆச்சிரியப்படுபவர்களாய், ஆச்சரியத்தன்மை நிறைந்தவர்களாய் மாறி விடலாம்.

என்னைப் போன்ற ஒரு மனிதனை தினமும் இருமுறை கேட்பது கடினமாக இருக்க வேண்டும் அது எனது பார்வையை பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு அளிக்கிறது ஆனால் அதை நான் வார்த்தைகளில் பகிர்ந்து கொள்ள முடியாது என்னுடைய கண்ணீர் அதைக் காட்டும். நான் அதை சொல்ல முடியாது.

என்னால் எதையும் கேட்க முடியவில்லை எல்லோரும் மாட்டுச் சாணியால் முழுவதும் நிறைந்துள்ளனர். நான் கேட்க விரும்பவில்லை. நான் திரும்பவும் ஓய்வு கொண்டு வானவில்லை பார்க்கலாம்.

இது தான் கவிதையின் அடிப்படை. இந்த நொடியில் தான் ஏசு அவருடைய நீதி கதைகளைக் கூறினார், குறிப்பாக மலை பிரசங்கம் இப்படியொரு நொடியில் தான் கூறப்பட்டது. அது மலையிலிருந்து பேசப்பட்டது என்று பொருளல்ல. ஆனால் ஒரு மிக உயர்ந்த இடத்திலிருந்து இந்த உயரத்திலிருந்து மட்டுமே உண்மையைப் பற்றியும் அழகைப் பற்றியும் பேச இயலும். இது தான் அழகு இந்த நொடி, இந்த நொடியில் சிறந்த செல்வங்கள் உருவாக்கப்பட்டன. நீ அந்த நொடிக்கு மிகவும் பக்கத்திலிருக்கிறாய்…. ஆனால் மிகவும் தொலைவில் அது உனக்குள்ளே இருக்கிறது. நீ உனக்குள் குதிக்கும் போதெல்லாம் அடைந்து விடலாம்….

ஆனால் நான் எந்த விதத்திலும் உனது வாழ்க்கையில் குறுக்கிட விரும்பவில்லை…

பதினைந்து நிமிடங்களில் நானொரு மலைப்பிரசங்கத்தை கொடுத்து விட முடியும், இந்த நொடி போதுமான அளவு உண்மையாக உள்ளது. நான் எதைப்பற்றி பேசுவது? நான் உன்னை கேட்க வில்லை, நான் என்னைச் சுற்றி உள்ள இந்த அழகு தன்மையைக் கேட்கிறேன்….

நான் எதைப் பற்றி பேசுவது?

அழகைப் பற்றி?

பரவசத்தைப் பற்றி?

மௌனத்தைப் பற்றி?

சொல்வதற்கு எவ்வளவோ இருக்கிறது ஆனால் அவையனைத்தும் ஒரே விஷயத்திற்கு வருகின்றன. மகிழ்ச்சி, அழகு, மௌனம் எல்லாமும் ஒன்றையே குறிக்கின்றன. மௌனம்….

என்னுடைய ஒரே அனுபவம் மிகப்பெரிய மௌனம் அதில் நான் கூட இல்லை… மௌனம் மட்டுமே இருக்கிறது….. நான் எல்லையற்றது, முடிவற்றது, எந்தவித எல்லைகளுமற்றது என்பதை குறிக்கிறேன்.

வார்த்தைகள்…. அவை பல விஷயங்களை செய்ய முடியும், ஆனால் உண்மையில் பெரியதாக ஏதுமில்லை ஒருவர் கடந்ததிலேயே இருந்தால் வார்த்தைகளை இழந்து விடுவார்.

இராசயனம் இரசவாதத்தின் ஒரு பக்க விளைவு இரசவாதம் தியானத்தின் உண்மையை பூசாரிகளிடமிருந்தும் மதக்குருக்களிடமிருந்தும் மறைக்கும் ஒரு முயற்சி திரையின் பின் தூய்மையான மதத்தன்மையைத் தவிர ஏதுமில்லை. இந்த நோவாவின் கூட்டிற்குள் உண்மையின், அழகின், உணர்வின் ஆதாரம்…. மற்றும் அழகு கடைசி முடிவான பிராத்தனை.

இன்னும் நேரமிருந்தால் நான் இன்னமும் ஒரு பாடல் பாடுவேன், என் பாடல் பெரிதாக இல்லாமல் இருக்கலாம், வெறும் ஒரு பறவைப் பாடல் இன்னும் குறைவாக கூட இருக்கலாம், ஆனால் ஒரு பறவையின் பாடல் பாடப்படும் பொழுது யார் கவலைப்பட போகிறார்கள்? அது வெறுமனே வண்ணங்களாக இருக்கலாம், ஆனால் ஒரு வானவில்லின் வண்ணங்கள்.

என்னுடைய விரல்கள்? கவலைப்படாதே, அது பழைய பழக்கம் நான் என்னுடைய விரல்களை, என்னுடைய கைகளை பேசும் போது உபயோகப்படுத்தத முயற்சிக்கிறேன். பழக்கம் வருகிறது. ஏனெனில் வார்த்தைகளால் சொல்ல முடியாது, வெறும் ஒரு அசைவு, வெறுமனே ஒரு விரல் கூட அதிகம் சொல்லி விடும். கைகள் மிகவும் பேச்சாற்றல் மிக்கவை.

நான் மனித குலத்தை இவ்வாறு நினைவுக் கொள்ள விரும்புகிறேன் உயரத்திலிருந்து திரும்ப வருவது மிகவும் கடினமாக உள்ளது, உடலுக்குள் திரும்ப வருவது….. எனவே அது சிறிது நேரம் எடுக்கிறது. தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்.

## தொடர் - 1

## சந்திப்பு – 6

நல்லது, இதைத்தான் நான் கஞ்சத்தனமின்றி இருப்பது எனக்குறிப்பிடுகிறேன். மனம் எப்போதும் கஞ்சத்தனமானது. எப்போதும் அது ஒரு ஏமாற்றுக்காரன். அது வேறு விதமாக இருக்க முடியாது. மனம் எப்போதும் தடை செய்ய, நிறுத்த முயற்சி செய்கிறது ஏனெனில் எல்லைக்குட்பட்டதை கட்டுப்படுத்த இயலும். ஒருவர் எல்லாவற்றிலும் முழுமையைக் கொடுக்க வேண்டும், பிறகு ஒருவர் வாழ்க்கையின்

இருப்புத் தன்மையை அறிய இயலும். அது தான் வாழ்வின் உயிர்... சிறந்ததல்ல, புனிதமானதும் அல்ல, மற்றதும் அல்ல, மற்றதன் சங்கிலியும் அல்ல.

நான் படிப்படியாக நடக்கும் புரட்சியை நடத்தவில்லை.... எனவே அவ்வப்போது பயமற்று இருங்கள், மற்றும் நினைவில் கொள்ளுங்கள், என்னுடன் எந்த அபாயமும் இல்லை. நான் இழப்பதற்கு ஏதுமில்லை. நான் எல்லாவற்றையும் இழந்து விட்டேன். நான் இழப்பதற்கு மேலும் ஏதுமில்லை. ஏனெனில் இப்போது என்னிடம் இருப்பது எப்போதும் தொலைய முடியாதது மட்டுமே....

உபநிடதங்கள் பாடுகின்றன "இறப்பற்ற தன்மைக்கு அப்பால்... கூட்டிச் செல்லுங்கள்" யார் உங்களுக்காக அதைச் செய்வார்கள்? அது பயனற்றது. நீயாக மட்டுமே செல்ல முடியும் யாரும் உன்னை கூட்டி போக முடியாது, நீ மட்டுமே. உபநிடதங்கள் தொடர்கின்றன, ஆனால் அவை அழகான வார்த்தைகள் மட்டுமே. வார்த்தைகள் வார்த்தைகள் தான், எவ்வளவு அழகானதாக இருந்தாலும் அவை வெறுமையானவை அவை ஒருபோதும் கவிதையை சுமக்க முடியாது. அவை ஒருபோதும் மூலத்தை உள்ளடக்க முடியாது.

"தலைவனே எங்களை உண்மையற்றதிலிருந்து உண்மைக்கு கூட்டிச்செல்லுங்கள்...."

ஆனால் உன்னை எப்படி உண்மையற்றதிலிருந்து எடுக்க முடியும்? நீ அதை பிடித்துக் கொண்டிருக்கிறாய் யாரும் அதனுடன் உன்னை பிணைக்க வில்லை, நீ தான் பிடித்து கொண்டிருக்கிறாய், அது உன்னுடைய வெறுப்பில் இருக்கிறது. உன்னுடைய கோபம், உன்னுடைய பொறாமை, உன்னுடைய கஞ்சத்தனம், அதைப்பற்றி உன்னுடைய புரிதலைத் தவிர வேறு யார் உன்னை அதை கடந்து கூட்டிச் செல்ல முடியும்? நான் வற்புறுத்துகிறேன். புரிதல் மட்டுமே வழி. இது உனக்காக தயார் செய்து வைக்கப்பட்ட பாதையல்ல நீ தான் அதை உருவாக்க வேண்டும். நீ அதனை உருவாக்க வேண்டும், நீ அதனை வாழ்தலின் மூலம் உருவாக்க வேண்டும் அதைத்தவிர வேறு வழி இல்லை.

நீ இந்த இருப்பு தன்மையில் இதுவரையில் இருந்தது இல்லை இது அபூர்வமானது.

இமயமலை பனியால் நிரம்பி உள்ளது, தூய்மையான வெண்மை, தூய்மையான வெகுளித்தனம், தூய்மை. அதைத்தான் பனியின் வெண்மை என்னும் வார்த்தை குறிக்கிறது, அது தான் என்னுடைய நிறம். ஆரஞ்சு என்னுடைய சீடர்களின் நிறம், சூரிய உதயத்தின் நிறம். என்னுடைய நிறம் வெண்மை, மற்றும் அது வெண்மையாக மட்டுமே இருக்க முடியும் ஏனெனில் வெண்மை மற்ற அனைத்து நிறங்களையும் உள்ளடக்கியுள்ளது. அது அனைத்துமானது அது ஒன்றானது.

முற்றிலுமாக நான் சொல்வதை கேட்க வேண்டும் இது ஒரு வழித் தொடர்பு நான் சொல்கிறேன். நீ கேட்கிறாய்.... நான் உனக்கு கட்டளையிடுகிறேன் அதை தவிர வேறு வழியில்லை. நான் உனது ஆத்மாவில் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது என்னை தொந்தரவு செய்யாதே.

பார் நான் ஒரு ஏழ்மையான மனிதன், இருப்பதிலேயே ஏழ்மையானவன், ஆனால் இருப்பதிலேயே பணக்காரனான ஏழை. ஒரு வேளை அப்படியொரு விஷயம் சாத்தியமானதாக இருந்தால் என்னிடம் பூமியில் எந்த அரசினிடமும் இல்லாத அளவிற்கு எல்லாம் உள்ளன. நெப்போலியனும், அலக்ஸாண்டரும் கண்டிப்பாக பொறமைப் படுவார்கள் அவர்கள் கண்டிப்பாக பொறாமைப்படுவார்கள்.

எனவே கேள் மற்றும் என்னிடம் எதுவும் சொல்ல முயற்சி செய்யாதே ஏனெனில் நீ என்ன சொன்னாலும் அது மாட்டுச்சாணம்! என்னைப் பொறுத்தவரை நான் வெறுமனே நான் நானாக இருக்க விரும்புகிறேன். ஒரு நாள் நான் இங்கே உங்களுடைய நோவாவின் படகில் தனிமையில் சொல்வது வெளியில் அறிவிக்கப்பட வேண்டும், ஆனால் பொறுங்கள்.

சிறந்தது அனைத்தும் இங்கிருந்து தான் வருகிறது. மேன்மையுடைய அனைத்தும் இங்கிருந்து தான் வருகிறது. அழகுடைய அனைத்தும் இங்கிருந்து தான் வருகிறது.....

என்னுடைய விரல்கள் கூட நான் சொல்ல விரும்புவதை சொல்ல இயலாமல் போகலாம் என நான் அச்சம் கொள்கிறேன். இந்த உச்சிகளில் இருப்பதை நான் விரும்புகிறேன். நான் உயரங்களை விரும்புகிறேன். இது தான் அழகு இது தான் சுந்தரம். இது என்னை காதலிப்பவர்களுக்கு மட்டுமே நான் விளக்கக் கூடிய ஒன்று. இது அழகாக உள்ளது, இது ஒரு கதையல்ல, இது ஒரு நாவல் அல்ல, இது

நிதர்சனம். என்னுடைய கண்ணீரே அதற்கு சாட்சி. உண்மை ஒருவருடைய கண்ணீரால், ஒருவருடைய இருப்பால், ஒருவருடைய வாழ்க்கை முறையால் நிரூபிக்கப்பட வேண்டும்.

ஒரு விஞ்ஞானி தாராளமாக இருக்க முடியாது, அவர் கவனமாக இருக்க வேண்டும், அவர் கணக்கு போடுபவராக, எச்சரிக்கையாக இருக்க வேண்டும்… ஆனால் திரும்பவும் அவருடைய இடது பக்கம் ஆட்கொள்கிறது. யசுபாரதி வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார். இது ஒரு துருவ நேர்கோடு, கீத் பாரதி ஆண் வலது பக்கத்திற்கு பெண் யசு பாரதி இடது பக்கத்திற்கு இது விபத்தல்ல. எந்த ஆணும் இடது பக்கமாக இருக்க முடியாது, ஒரு பெண் மட்டுமே, ஒரு பெண் மட்டுமே, ஏனெனில் ஒரு பெண் மட்டுமே என்னுடன் இடது பக்கத்திலிருந்து தொடர்பு கொள்ள முடியும். ஆண் வெறும் இந்த வறுமையான வலது கை, வேலை செய்யக்கூடியது, உபயோகப்படுத்தக் கூடியது தொழில் ரீதியானது, இல்லாவிடில் எந்தப் பயனுமில்லை. வலது பக்ககத்திற்கு எந்தக் கவிதையும் கிடையாது, எனவே ஆண் வலது பக்கத்திலேயே இருக்க வேண்டும், பிறகு அவன் சரி. அவன் இடது பக்கத்திலிருக்க முயற்சி செய்யும் பொழுது அவன் தவறாகிறான்.

நான் கிறுக்கனாகப் போகிறேனோ என்னவோ என பயப்பட வேண்டாம். அது சாத்தியமற்றது. ஒரு கிறுக்கன் எவ்வாறு திரும்பவும் கிறுக்கனாக முடியும்? இயலாது! எனவே என்னுடன் நீங்கள் பயமற்று இருக்கலாம்.

ஒரு மலரைப் போல….

ஒரு மலர்,

தேனீக்கள் அதைச் சுற்றி வட்டமிடுகின்றன.

அது தான் என்னைச் சுற்றி நடக்கிறது.

மலர் திறக்கிறது.

தேனீக்கள் வரத்தொடங்குகின்றன.

பாடுகின்றன.

நீ பைத்தியமாகிறாய் என்பதை பார்க்கும் போது நான் நிறுத்தி விடுவேன். அதுவரை அந்த மலர் வளரட்டும் மற்றும் பறவைகள்

பாடட்டும்.... நான் ஒரு கிறுக்கன் எல்லோருக்கும் அது தெரியும் எனவே கவலைப்பட தேவையில்லை.

ஆ.......... மலர்கள்............

பறவைகள் ...........தேனீக்கள்.........

நான் எல்லாவற்றையும் விரும்புகிறேன்.

எதுவும் எனக்கு கெடுதல் செய்ய முடியாது

மரணம் கூட.

இப்போது, இப்போது........ அளவிடமுடியாதது!

அதனுடைய பிரமாண்டமே......

அதனுடைய நளினம்.....

சொல்வதற்கு எனக்கு பயமாக இருக்கிறது.......

எனக்கு உன்னுடைய கேலிச் சிரிப்பு கேட்கிறது. என்னுடைய உடல். அதனை வெளிப்படுதத முடியாமல் கூட போகலாம் என நான் பயம் கொள்கிறேன், 25 வருடங்களாக நான் தவறான உச்சரிப்புடன் பேசிக்கொண்டிருக்கிறேன். யார் கவலைப்படுகிறார்கள்? விஷயம் நான் எந்த உயரத்திலிருந்து பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதேயாகும். நீ எதற்கு அவசரப்படுகிறாய்? நீ அவசரமாக எங்கும் போகவில்லை. எல்லோரையும் இங்கு கூப்பிடு.

ஓய்வெடுப்பதற்கு நேரம் இருந்தால்...... நான் அவ்வப்போது ஓய்வெடுத்துக் கொள்கிறேன். நீங்கள் உணர்வோடு இருக்கிறீர்களா இல்லையா என நான் சோதித்துப் பார்க்க வேண்டும். நான் இந்த வினாடியில் இறந்தால் கூட, ஒருபோதும் பயப்படாதே, ஏனெனில் நான் என்னுடைய எல்லா ஆசீர்வாதங்களுடனும், உன்னுடைய எல்லா மகிழ்ச்சிகளுடனும் தான் இறப்பேன். ஆவை வெளிப்படுத்தப்பட்டாலும் வெளிப்படுத்தப்படாவிட்டாலும் கூட.

கீத் பாரதி சிறிது அதிர்ச்சி அடைந்தது போல் தோன்றுகிறார், நான் நடக்கும் போது அவர் என்னை விட அதிகமாக அதிர்ச்சி

அடைகிறார். நான் நடப்பதை பார்த்திருக்கிறாயா? அது எனக்கு மிகவும் சிரமமாக உள்ளது, ஆனால் உயரங்களை பொறுத்த வரை என்னால் பறக்க முடியும்.

நான் ஒரு சைத்தான்.

நான் எப்போதும் ஒரு சைத்தானாகவே இருந்து வந்திருக்கிறேன்!.

## தொடர் - 1

## சந்திப்பு – 7

இது நல்லது. இப்போது எழும்புங்கள் பூமியை பின்னால் விட்டு விடுங்கள் வானத்தை நோக்கி பறங்கள் விண்மீன்களை நோக்கிச் செல்லுங்கள். சென்று கொண்டேயிருங்கள்.

வெளிச்சம் என்னை தொந்தரவு செய்வதில்லை. நான் ஆயிரக்கணக்கான சூரியன்களுக்கு முன் நின்று கொண்டு இருக்கிறேன். எனவே நீ என்னை துளி கூட தொந்தரவு செய்ய முடியாது. சத்தமும் முழு சந்தைக் கடையும் எல்லா நேரமும் என்னைச் சுற்றி இருக்கிறது. எனவே உன்னுடைய சத்தம் துளிக்கூட தொந்தரவு செய்யவில்லை.

இது அபூர்வம் அழகிற்கு இவ்வளவு அருகில் வருவது அழகாக உள்ளது. மிக அருகில் அதாவது வெறும் ஒரு மெல்லிய திரை மட்டுமே உள்ளது. மற்றும் அழகைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அழகாக இருப்பதன் உடைய அழகு அது கடலில் ஒரு அலையைப் போல அல்லது வானவில்லைப் போல. அது பொருளல்ல. அது பொருளற்ற தன்மையுடையது.

எனக்கு இந்த வெளிச்சம் பிடித்துள்ளது. இது நல்லது இது நான் எதிர் கொண்டு இருப்பதைப் போல ஏதோ ஒன்று. நான் அப்படி ஒரு பிரமாண்டமான வெளிச்சத்தை எதிர்க்கொண்டிருக்கிறேன். இது ஒன்றும் இல்லை. நான் அப்படி ஒரு இசையை எதிர்கொண்டிருக்கிறேன். நான் கிட்டத்தட்ட அதனுள் மூழ்கி விட்டேன். அழகிற்கு அருகில் இருப்பது என்பது இறப்பிற்கு அருகில் இருப்பதாகும். என்னால் அதை மறக்க முடியாது. நான் திரும்ப திரும்ப இறப்பிற்கு அருகில் சென்று இருக்கிறேன். என்னுடைய வாழ்வில் பலமுறை இறப்பிற்கு அருகில் தெரிந்தே சென்று இருக்கிறேன். உனக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் நாம் கணக்கற்ற முறை இறப்பை சந்தித்து இருக்கிறோம். ஆனால் மிகவும் பயத்துடன் அதனால் அதனுடைய அழகை நாம் பார்க்கவில்லை. இல்லாவிடில் இறப்பு என்பது கடவுளின் மறுபெயர் யாரும் இன்னும் இதைச் சொல்லவில்லை என்பதை என்னை ஆச்சரியத்துக்கு உள்ளாக்குகிறது. அது கடவுள் ஒளி மகிழ்ச்சி அழகு ஆகியவற்றின் மறுபெயர்.

எனவே நான் எனக்குள் செல்கிறேன் சென்று கொண்டேயிருக்கிறேன். கடந்ததற்குள் ஆழமாக கடந்தது மட்டுமே உள்ளது. மற்றவை அனைத்தும் மறைந்து விட போகின்றன. கடந்தது மட்டுமே எப்போதும் இருக்கும். நான் கடந்ததை பற்றி பேசிக்கொண்டிருக்கிறேன்.

கடந்ததிலிருந்து அது கடினம் அது எப்போதும் சிரமமானதாகவே இருந்து வந்துள்ளது. எந்த மொழியிலும் அதற்கு வார்த்தைக்கள் இல்லை. குறிப்பாக ஆங்கிலம் நான் ஆங்கில மொழிக்கு எதிரானவன் அல்ல. பல காரணங்களுக்காக அதை நான் விரும்புகிறேன். அது துல்லியமாக உள்ளது. மற்ற மொழிகளை விட அதிக துல்லியமாக உள்ளது. அந்தக் காரணத்திற்காகவே அது சிரமம். அது அறிவியலுக்கு தொழில் நுட்பத்திற்கு நல்லது. ஆனால் மதத்திற்கு அல்ல.

விவேக் உங்களுடைய குறிப்புக்களை ஒரு கிறுக்கனின் பிதற்றல்கள் என அழைக்கிறாள். ஒரு கிறுக்கனால் எழதப்பட்டது, ஆனால் பிதற்றல்கள் அல்ல. நான் கிறுக்கனாக இருந்தால் பிறகு யார் நல்ல மனநிலையில் உள்ளவன்? நான் கிறுக்கனாக இருந்தால் பிறகு யார் நான் கிறுக்கனல்ல என்று கூற முடியும்? நிக்சன்? யார் நல்ல மனநிலையை சொந்தம் கொண்டாட முடியும்? இந்த வற்றிய பூமி பைத்திய மனிதர்களால் நிறைந்துள்ளது. எனவே நான் ஒரு கிறுக்கனாக தெரிகிறேன். கிறுக்கர்களுக்கு நடுவே ஒரு நல்ல மனநிலையில் உள்ள மனிதன் எப்போதும் அப்படித் தான் தெரிவான்.

கலீல் ஜிப்ரான் எழுதிய ஒரு அழகான கதை உள்ளது. அதை நான் எப்போதும் விரும்பி வந்துள்ளேன்.

ஒரு பழைமையான நகரம் நல்ல அன்புகொண்ட ஒரு மன்னனாலும் ராணியாலும் ஆளபட்டு வந்தது. மன்னனும் ராணியும் அவரது தலைமை மந்திரியும் தவிர மற்றவர்கள் அனைவரும் உபயோகப்படுத்தும் ஒரே கிணற்றில் ஒரு மந்திரவாதி ஒரு மந்திர பொடியை போட்டுவிட்டான். யார் இந்த நீரைக் குடித்தாலும் பைத்தியம் ஆகி விடுவார்கள் என அவன் வெளிப்படையாக அறிவித்தான். மன்னன் ராணி தலைமை மந்திரியைத்தவிர முழு நகரமும் பைத்தியமாகி விட்டது. அவர்கள் அந்தக் கிணற்றிலிருந்து தான் நீரை குடித்தாக வேண்டும். மற்றும் அவர்கள் அனைவரும் பைத்தியமாகி விட்டனர். மன்னன் ராணி மந்திரியை தவிர அவர்கள் அனைவரும் பைத்தியமாகி விட்டனர்.

நகரத்தின் அனைத்து பைத்தியக்கார மக்களும் அரண்மனையைச் சுற்றி திரண்டு மன்னன் பைத்தியமாகி விட்டான் எங்களுக்கு ஒரு பைத்தியக்கார அரசன் வேண்டாமென்று மன்னனுக்கு எதிராக கத்துகின்றனர். மன்னன் தலைமை மந்திரியை என்ன செய்வது என்று கேட்டான் மந்திரி கண்டிப்பாக ஒரு ஞானமுள்ளவனாக இருக்க வேண்டும். இன்றைய அரசியல்வாதிகளைப் போல அல்ல. ஒரு உள்ளார்ந்த மனிதனாக இருந்திருக்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டல்ல ஆனால் ஞானமுள்ளவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். நான் கூட்டத்தை ஒரு குறிப்பிட்ட நேரம் வரை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறேன். நீங்கள் நகரத்தின் கிணற்றுக்குச் சென்று நன்றாக நீரை குடியுங்கள். நன்றாக குடியுங்கள் அதில் போதை கொள்ளுங்கள் பிறகு திரும்பி வாருங்கள் பிறகு எல்லாம் சரியாகி விடும் என்று அவர் கூறினார்.

மன்னர் விரைவில் ஆனால் அம்மணமாக பாடிக்கொண்டு ஆடிக்கொண்டு முன் பக்க வாயில் வழியாக திரும்பி வருகிறார். புரவசத்தின் பாடல்களை பாடிக்கொண்டு அவர் கூட்டத்தோடு ஆடுகிறார். மன்னரின் ஆட்டம் கூட்டத்தை அவரின் நல்ல மனநிலை குறித்து ஒப்புக்கொள்ள வைத்து விடுகிறது. அவர்கள் அவரை நல்ல மனநிலையில் உள்ளவர் என அறிவிக்கிறார்கள். அவர்கள் அவருக்கு திரும்பவும் முடிசூட்டுகிறார்கள். அவர்கள் கொண்டாடுகிறார்கள். அவர்கள் அவர் நல்ல மனநிலைக்கு திரும்பியதைக் கொண்டாடுகிறார்கள்.

நான் பைத்தியகாரர்களால் சூழப்பட்டுள்ளேன். நான் ஒரு பைத்தியகார உலகத்திற்குள் இருக்கிறேன். கண்டிப்பாக நான் கிறுக்கனாக என்னுடைய சொந்த மக்களுக்கு கூட கிறுக்கனாக தெரிவேன்.

25 வருடங்களாக நான் கத்தியதில்லை. நான் மைக்கிலேயே பேசியுள்ளேன். ஆனால் உங்களுக்காக நான் வாயை மூடுங்கள் என்று கூறுகிறேன். உனக்காக அல்ல ஆனால் உனக்குள் இருக்கும் முட்டாளுக்காக உனக்காக என்னிடம் கண்ணீர் மற்றும் மகிழ்ச்சி மற்றும் பிராத்தனை தவிர வேறு ஒன்றுமில்லை. பாருங்கள் எனது கண்ணீர் வருகிறது. அது இடது கண்ணிலிருந்து வருகிறது. அது வலது பக்க மூளையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இடது கையைப்போல.

வலது பக்க மூளை சரியானது. வலது சரியானது மற்றும் இடது தவறானது என்று கூறும் போது அது மூளையை மட்டுமே குறிக்கிறது. உடல் முற்றிலும் அதற்கு எதிர்மறையானது. வலது தவறானது மற்றும் இடது சரியானது நீ கண்ணீரை பார்க்க விரும்பினால் நீ இடது பக்கத்திற்கு வரவேண்டும்.

யாரோ ஒருவருக்காக அழுவது அழகானது. யாரோ ஒருவருக்காக கண்ணீர் விடுவது மகிழ்ச்சியாக இருப்பதை விடவும் அழகானது. அது ஒரு குளியலைப் போன்றது. அது நடு இரவில் சூரியன் எழுவதைப் போன்றது. நான் எதுவும் சொல்ல மாட்டேன். நான் மௌனமாக மட்டுமே இருப்பேன்.

எழுந்திரு!

இணக்கமாயிரு!

விழித்திரு!

இந்த வார்த்தைகள் புரிந்து கொள்ளபட வேண்டியவை மற்றும் நான் ஒரு போதகர் அல்ல. போதனை அழுக்கானது நான் ஒரு காதலன்.

குறைந்த பட்சம் நான் பைத்தியமாக முடியாது மற்றும் நான் இந்த நொடியில் இறக்க போவதில்லை. நான் செய்வதற்கு ஒரு சில வித்தியாசமான காரியங்கள் இன்னும் உள்ளன.

நான் முன்பு அதை வெளிப்படுத்துவதற்கு ஆங்கிலம் மொழியல்ல என்று கூறிக்கொண்டிருந்தேன். அது மிகவும் தொழில் நுட்பரீதியானது. மிகவும் துல்லியமானது. ஆங்கிலம் நல்ல அறிவியலாளர்களை உலகிற்கு கொடுக்க முடியும். ஆனால் ஞானிகளையல்ல. நான் உண்மையிலேயே ஒரு ஞானி. அறிவியலாளர்களின் உலகத்தில் ஒரு ஞானி. விண்மீன்களை விட உயரமாக.

நன்றி.

கடைசி வார்த்தையை எப்போதும் நானே சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கல்லறையில் கூட நான் எழுந்து உட்கார்நது சரி மூடிவிடுங்கள் என்று கூறுவேன். அது கல்லறையாக இருந்தால் ஆனால் அது இந்தியாவிலிருப்பது போல் நடந்தால் நான் சரி நான் நெருப்பை பற்ற வையுங்கள் என்று கூறுவேன். ஆனால் நான் கடைசி வார்த்தையை கூற விரும்புவேன். நீ என்னை சீண்டினால் நான் பயங்கரமானவனாகி விடுவேன். நான்தான் கடைசி சிரிப்பை சிரிப்பேன்.

## தொடர் - 2

## சந்திப்பு – 1

ஓம் மணி பத்மி ஹூம்

திபெத்தியர்கள் ஒரு மந்திரத்தைக் கொண்டுள்ளனர்.

ஓம் மணி பத்மி ஹூம் தாமரை மற்றும் கீரிடம் இரண்டும் ஒன்றாக இப்படிப்பட்ட ஒரு நொடியிலிருந்தே உருவாகியிருக்க வேண்டும்.

ஓம் மணி பத்மி ஹூம்

ஓம் வெறுமனே ஓர் ஆச்சரியம் அது வெறுமனே ஆ அல்லது ஓ போன்றது. அது ஓர் வார்த்தையல்ல. அது அர்த்தமற்றது ஆனால் அதிக அர்த்தமுள்ளதும் கூட அதனுடைய அழகிலும் அதனுடைய மகிழ்ச்சியிலும் அதனுடைய ஆழத்திலும் அந்த விதத்தில் அர்த்தமுள்ளது ஓம்.

எனக்கு பாஷோ வின் நினைவு வருகிறது. பழைய பாஷோ எனக்கு அந்த ஜப்பானிய துணுக்கு கவிஞரின் நினைவு வரும்போதெல்லாம் கண்ணீர் வர தொடங்குகிறது. பாஷோ சிறந்த மனிதர்களில் அல்லது சிறந்த துறவிகளில் ஒருவர் எதை நீ விரும்பினாலும் சரி என்னை பொருத்தவரை இரண்டும் ஒன்றுதான். பழமையான பிறப்பு அந்த சத்தம் ஓ அந்த சத்தம் தான் ஓம். அந்த சத்தம்...... தவளை குளத்திற்குள் குதிக்கிறது.

அந்த பழைய குளத்தில்

தவளை உள்ளே குதிக்கிறது.

பிளாப்!

ஓம் மணி பத்மி ஹம்

தாமரைக்குள் வைரம் நான் குளத்திற்குள் மூழ்குகிறேன்.

இது மிகவும் அழகாக உள்ளது.

ஓம் மணி பத்மி ஹம்

பிறப்பிற்கு முன் நான் சரியாக இருந்தேன்.

இறப்பிற்கு பிறகும் நான் சரியாக இருப்பேன்.

வாழ்க்கையிலும் அதை சரி தொடர்கிறது. மற்றும் சரி நேர்த்தியானது.

டோஜன் ஒரு கவிதை துணிக்கில் பாடுகிறார். டோஜன் ஒரு துறவி.

வருகிறது

விலகி போகிறது

அருவி

எந்த தடத்தையும் பின்னால் விட்டுச் செல்வதில்லை.

அதற்கு எந்த வழிக்காட்டியும் தேவைப்படுவதில்லை.

ஓம் மணி பத்மி ஹம்

மிகவும் அழகானது மிக பிரமாண்டமானது நான் புத்தர்களின் நிலத்தில் இருக்கிறேன். திரும்பவும் என்னால் உளற முடியும். ஏனெனில் உளறல் மட்டுமே கவிதையாக முடியும்.

அன்றொரு நாள் கீத் பாரதி உன்னை நான் முட்டாள் என்று அழைத்ததால் நீ திரும்பவும் சிறிது காயப்பட்டு விட்டாய் என்பதை நான்

பார்த்தேன். தயவு செய்து ஒரு கிறுக்கனின் மொழியை புரிந்துக் கொள்ள முயற்சி செய்.

உனக்கு முட்டாள் என்னும் வார்த்தையின் அர்த்தம் புரிய வேண்டுமானால் தாஸ்தோவஸ்கி எழுதிய இளவரசி என்னும் புத்தகத்தை படி அல்லது அதை விடச் சிறந்தது மைக்கேல் நேமினுடைய புத்தகம் மீர்தாதின் புத்தகத்தை படி. அது ஒப்பிட இயலாதது. ஒவ்வொரு வார்த்தையும் தூய புரிதல். குறிப்பாக மிகவும் இனிப்பானது. ஏனெனில் எனக்கு சர்க்கரை வியாதி உண்டு என்பதை நீ அறிவாய். எல்லா சர்க்கரை வியாதிகாரர்களுக்கும் மீர்தாதின் புத்தகம் நல்லது. ஏனெனில் அதில் சுத்தமாக சர்க்கரை இல்லாவிட்டாலும் கூட அது மிகவும் இனிப்பானது.

மீர்தாதின் புத்தகம் முட்டாளை பற்றி பேசுகிறது. முட்டாள் என்பது வெறுமனே வெகுளியான குழந்தையை போன்ற கபடமற்ற என்பதையே குறிக்கிறது. இதனால் தான் நான் அன்று உன்னை ஒரு முட்டாள் என்று மிகுந்த அன்போடு அழைத்தேன்.

நான் யாராவது ஒருவர் மீது அன்பு செலுத்துபோது மட்டுமே அவர்களை நான் முட்டாள் என்று அழைப்பேன். இல்லாவிடில் உண்மையான முட்டாள்களுக்கு நான் மிகவும் மதிப்பளிப்பேன். நான் பிறகு சார் என்று அழைப்பேன். நான் உன்னை முட்டாள் என்று அழைத்தேன். ஏனெனில் நான் உன் மீது அன்பு செலுத்துகிறேன். நான் உன்னை முட்டாள் என அழைக்கும் போதெல்லாம் ஆனந்தப்பட்டு முழுவதுமாக பரவசபடு முழுமையாக ஆனந்தப்படு அப்போது மட்டுமே உன்னால் புரிந்துக் கொள்ள இயலும்.

ஓம்….ஆ! இது தான் உலகின் தொடக்கம். கிறிஸ்தவர்கள் நினைப்பது போல் யாரும் இதனை உருவாக்கவில்லை. கடவுள் இதனை உருவாக்கியதாக அவர்கள் நினைக்கிறார்கள் கடவுள் எதுவும் செய்யவில்லை. கடவுள் இந்த பிரபஞ்சம் தான். ஒரு உருவாக்குபவரல்ல. கடவுள் எல்லாவற்றிலும் இருக்கும் படைப்புத் தன்மை தான்.

கடவுள் இன்று கூட இந்த வினாடி கூட படைத்துக் கொண்டிருக்கிறார்.

எங்கெல்லாம் படைப்பில் சாத்தான்கள் உள்ளனவோ அங்கெல்லாம் கடவுள் இருக்கிறார். எது தொடக்கமாக இருந்திருக்க வேண்டுமோ அதை

நான் பார்க்கிறேன். எதுவும் இதை விட அழகாக இன்னும் தூய்மையாக இன்னும் இசையுடன் இருக்க முடியாது. வெறுமனே தூய்மையான இசை வெறுமனே தூய்மையான கவிதை நல்லவை எல்லாவற்றின் தூய தன்மை அழகானது எல்லாம்….

ஓம் மணி பத்மி ஹம்

இந்த மந்திரம் திபெத்தில் பல்லாயிரம் வருடங்களாக ஜபிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதனை திபெத்தில் மட்டுமே ஜபிக்க முடியும். ஏனெனில் அவர்கள் மட்டுமே உச்சத்தை அறிவார்கள். இமயமலையின் தூய்மையை அறிவார்கள். அந்த தூய்மை வேறு யாரும் அறிய முடியாது. திபெத் மட்டுமே உலகில் மதத்திற்கு மிக அருகில் வந்த ஒரு நாடு. திபெத் இப்போது கம்யூனிசவாதிகளின் கையிலிருப்பது துரதிஷ்டவசமானது. மிகவும் துரதிஷ்டவசமானது. அவர்கள் அதனை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதுதான் அடிபடையானது. உச்சக்கட்ட நன்மை அப்படிபட்ட கணங்களில் தான் மீர்தாதின் புத்தகத்தின் கரு உதயமாகி இருக்க வேண்டும். அப்படிபட்ட கணங்களில் கருக்கொண்ட புத்தகங்கள் ஒரு சில மட்டுமே. லாவோட்சுவின் தௌ டீ ஜிங்.

நேரத்தைப் பற்றி கவலைப்படாதே நீ எப்போதாவது எல்லா கவலைகளிலிருந்து விடுபடுவாயா? என்னைப் போல…. எல்லா நோக்கங்களிலிருந்தும் விடுதலை? ஆமாம் உன்னால் முடியும் என்று எனக்குத் தெரியும். ஒரு நாள் நீயும் ஆகிவிடுவாய் ஆனால் இந்த கணத்தில் நான் ஒரு கிறுக்கன் மற்றும் நீ ஒரு முட்டாள் என்ன ஒரு மாறுபட்ட இணைப்பு…..

ஓம் மணி பத்மி ஹம்

ஓம் மணி பத்மி ஹம்

ஓம் மணி பத்மி ஹூம்

ஓம் மணி பத்மி ஹூம்

இப்போது என்னுடைய நோக்கம் அழகு மட்டுமே ஆகவே தான் நான் பைத்தியகாரன். வெறுமனே இந்த அழகு தன்மையில் உன்னால் கற்பனை செய்து பார்க்க முடிந்தால்….. இது மிகவும் அழகாக உள்ளது. நான் பிறப்பிடத்தை அறிவேன். என்னால் அதனை உடனடியாக அடையாளம் கண்டு கொள்ள இயலும்.

என்னுடைய கண்களில் கண்ணீர் நல்லது மிகவும் நல்லது. ரோஜாக்கள் பூக்கின்றன. பறவைகள் மீண்டும் பாடுகின்றன மற்றும் இந்த முட்டாள்களுக்கு தெரியாது.

வார்த்தைகள் இருக்கும்பொழுது யாரும் வார்த்தைகளும் மலர்களும் ஒன்றாக இருக்குமென எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். நான் அர்த்தமற்றதை பேசுவதாக நீ நினைத்திருப்பாய் என்னுடைய மனதை விட்டு வெளியே செல்வது என்னால் இயலாத காரியம். என்னால் முடியாது. நான் வெளியே செல்கிறேன். ஆனால் நான் மனமற்ற நிலையில் இருக்கிறேன். நான் ஒரு கிறுக்கன் ஒரு முட்டாள் அல்ல. நான் அப்படி ஒரு உச்சத்தில் இருக்கிறேன். ஏதாவது பேசுவது கூட கடினம்…

ஓம் மணி பத்மி ஹூம்…..

தொடர் - 2

சந்திப்பு – 2

ஓம் மணி பத்மி ஹம்.....

தாமரைக்குள் வைரம்.

ஜுவுல் என்ற வார்த்தையைத் தொடர்வது உங்களுக்கு கஷ்டமாக இருக்குமென்பது எனக்கு தெரியும். அது ஒழுங்காக உச்சரிக்கப்பட வேண்டும். ஆனால் நான் ஒழுங்கான மனிதன் அல்ல அது ஜுவல் என்று உச்சரிக்கப்பட வேண்டும் ஆனால் நான் அதை ஜுவுல் என்றே உச்சரிக்கிறேன். நான் அதை சத்தத்தின்படி உச்சரிக்கிறேன். ஆங்கிலம் தர்க்கமற்றது அது ஒரு விதத்தில் எழுதப்படுகிறது. மற்றும் ஒரு

விதத்தில் பேசப்படுகிறது. என்னுடைய கஷ்டம் என்னவென்றால் நான் வாழ்ந்தது வளர்ந்தது எல்லாமே சத்தப்படி இருக்கும் மொழிகளை உபயோகப்படுத்தி தான் அவை எழுதப்படுவதும் பேசப்படுவதும் ஒரே விதத்தில் தான். ஆங்கிலம் சிறிது கிறுக்குத்தனமானது. யேசு அவருடைய வார்த்தைகளை நவீன ஆங்கிலப்பதிப்பில் படித்திருந்தால் அவர் தலையில் அடித்துக் கொண்டிருப்பார். அவர் அழுதிருப்பார். அவர் சிலுவையில் அப்பா இந்த மக்களை மன்னித்து விடுங்கள் - அந்த மக்கள் அவரை சிலுவையில் அறையும் மக்கள். - ஏனெனில் அவர்களுக்கு தாங்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாது என்று கூறினார். ஆனால் ஆங்கில பதிப்பை பார்த்து விட்டு அவர் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார் என்று எனக்கு கண்டிப்பாக தெரியும். அது இயலாத காரியம். யேசு அராபிக் மொழி பேசினார். அது இன்னமும் ஒரு சில மக்களால் கிழக்கில் இன்னமும் பேசப்படுகிறது.

குருட்ஜி∴ப் அந்த ஒரு சில மக்களோடு தொடர்பு கொண்டிருந்தார் மற்றும் யேசுவைப் பற்றி குருஜி∴ப் சொன்னவை இந்த ஒரு சில மக்களிடமிருந்து தான். புதிய நவீன ஆங்கில பதிப்பிலிருந்து அல்ல அவர் அந்த மக்களிடமிருந்து கதைகளை கேட்டறிந்தார். அந்த கதைகள் வாய் மொழியாக சொல்லப்பட்டவை. அராபிக் ஒரு பழமையான மொழி ஆகவே அது ஒரு கருவைக் கொண்டுள்ளது. ஒரு வித அழகு. அதை ஒரு காடு மட்டுமே கொண்டிருக்க முடியும். மற்றும் ஒருபோதும் ஒரு விக்டோரியா ஆங்கில தோட்டம் கொண்டிருக்க முடியாது. ஒரு விக்டோரியா ஆங்கில தோட்டத்திற்கு அது இயலாத காரியம். மரங்கள் சீரமைக்கப்படுவதையும் அளவீடுகளுக்கு ஏற்ப வெட்டப்படுவதையும் பார்க்க பரிதாபமாக உள்ளது.

அவருக்கு என்ன நடக்கப்போகிறது என்பது பற்றி யேசுவிற்கு எதுவும் தெரியாது. அவர் மொழி பெயர்க்கப்படுவார் எனபது அவருக்கு தெரியாது. எந்த ஞானியும் மொழிபெயர்க்கப்பட முடியாது. அராபிக்கிலிருந்து ஹுப்ருவிற்கு அவர் மொழி பெயர்க்கப்பட்டார். நிறைய தொலைந்து விட்டது. ஏனெனில் அவர் அந்த யூதர்களை எதிர்த்துத்தான் போராடிக் கொண்டிருந்தார் மற்றும் அவர்கள் அவரை ஹுப்ருவிற்கு மொழிப்பெயர்ப்பு செய்த போது அந்த மொழிப் பெயர்ப்பிலேயே யேசு தொலைந்து விட்டார்.

பிறகு அவர் கிரேக்கத்திற்கு மொழிப்பெயர்க்கப்பட்டார்! ஒரு தவறிலிருந்து மற்றொரு தவறு! அராபிக்கிலிருந்து ஹுப்ருவிற்கு

ஹுப்ருவிலிருந்து கிரேக்கத்திற்கு பிறகு அவர் ரோமன் மொழிக்கு மொழிப்பெயர்க்கப்பட்டார். இது மிகவும் முறைகேடானது ஏனெனில் அவரை கொன்றவர்களே யூதர்கள் மற்றும் ரோமானியர்கள் தான் மற்றும் இலத்தீனிலிருந்து அதாவது ரோமன் அவர் ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டார். இருந்தாலும் பழைய ஆங்கில மொழி பெயர்ப்பு இன்னமும் அழகாக இருந்தது. இன்னமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அது நவீன மயமாக ஆக ஆக அது குறைந்த விஷயங்களை கொண்டிருக்கிறது. அது மேலும் அசிங்கமானதாக ஆகிறது.

அதிர்ஷ்ட வசமாக நான் விவரமற்ற மக்களிடம் கல்வியறிவற்ற ஒரு கிராமத்தில் பிறந்தேன். 9 வருடங்களுக்கு நான் கல்வியறிவற்றவனாக இருந்தேன். என்ன ஒரு ஆசீர்வாதம்! எந்த நவீன கால குழந்தையும் அதைப் பெற முடியாது. அது சட்டத்திற்கு எதிரானது. நீ பள்ளிக்கு போயாக வேண்டும். 9 வருடங்களுக்கு எல்லா விதமான கல்வியிலிருந்தும் நான் முற்றிலும் சுதந்திரமானவனாக இருந்தேன். அதனால் தான் என்னால் உச்சக்கட்டத்தை ஊடுருவ முடிந்தது. தெரியாததுடன் இணைத்துக்கொள்ள முடிந்தது. அந்த 9 வருடங்கள் அழகானவை. மெய் மறக்கச்செய்யும் அளவு அழகானவை. கல்வி இல்லை. கட்டுப்பாடு இல்லை. ஒழுக்கம் இல்லை.

என்னுடைய சின்னஞ்சிறு வயது முதல் அதிர்ஷ்ட வசமாக என்னுடைய தாத்தாவினால் வளர்க்கப்பட்டேன். என்னுடைய அம்மாவுடைய அப்பாவினால். என்னுடைய அப்பாவினால் அல்ல. ஏனெனில் ஒரு தந்தை ஒரு ஒழுக்கத்தைப் போதிப்பவனாக இருந்தே ஆக வேண்டும். அவர் எதிர்க்காலத்தைக் குறித்து அக்கறை கொண்டேயாக வேண்டும். என்னுடைய தாத்தா நினைவில் கொள்ளுங்கள் அம்மா வழி பாட்டனார் ஏனெனில் என் தந்தையின் தந்தை முற்றிலும் வேறுபட்ட ஒரு மனிதன் என்னுடைய தாய் வழி பாட்டானாருக்கு வேறு குழந்தைகள் இல்லை. என்னுடைய தாய் ஒரு குழந்தை மட்டுமே என்னுடைய தாயிற்கு திருமணமானவுடன் அவர் அவருடைய அன்பு அனைத்தையும் என் மீது கொட்டினார்.நான் ஒரு அரசனைப்போல் வாழ்ந்தேன். அவர் என்னை ராஜா என்று அழைப்பார் அவருக்குப் பின்

யாரும் என்னை அப்படி அழைக்க வில்லை. ராஜா என்றால் அரசன் என்று பொருள்.

என்னுடைய பாட்டனார் மிகுந்த செல்வம் உடையவராக இல்லாமல் இருந்தாலும் கூட அவருடைய கிராமத்திலேயே பணக்காரர் அவர் தான். என்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் அவர் ஒரு யானையை கூட்டி வருவார். நான் யானை மேல் அமர்ந்து கொண்டு எல்லா திசைகளிலும் நாணயங்களை வீசுவேன். அது தான் அவருடைய பெரிய ஆனந்தம். அவருடைய நாட்களில் காகித நோட்டுக்கள் இல்லை. அப்போது அவை தங்க நாணயங்கள். என்னுடைய முழு வாழ்க்கையிலும் நான் அதைத் தான் செய்து கொண்டு இருக்கிறேன். வழியெங்கும் தங்க நாணயங்களை வீசிக்கொண்டு…. நான் இன்னமும் யானை மீது அமர்ந்து தங்க நாணயங்களை வீசிக்கொண்டு இருக்கிறேன்.

எனவே நீங்கள் புரிந்துக்கொள்ளாத ஏதோ ஒன்றை நான் சொல்லும் போது தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். நான் முற்றிலும் வேறுபட்ட ஒரு சூழலிருந்து வருகிறேன். நான் உண்மையிலேயே ஒரு அந்நியன் என்னுடைய சொந்த நாட்டிலேயே நான் ஒரு அந்நியன். என்னுடைய முழு பார்வையும் ஒரு வகையில் நாகரீகமற்றது மற்றும் ஒரு வகையில் மூலமானது. மூலமானது என்பதன் பொருள் நாகரீகமற்றது தொடக்கத்தைச் சார்ந்தது.

இன்று காலையில் நான் “The chawal in the lotus” என்று கூறினேன். எனக்கு அதன் சரியான உச்சரிப்பு தெரியும். ஆனால் தவறான ஒரு மனிதனுடன் என்ன செய்வது? நான் அதை இன்னமும் என்னுடைய வழியில் தான் உச்சரிப்பேன். உள்ளே வரும் பொழுது நான் விவேக்கிடம் கேட்டேன். எது சரியான உச்சரிப்பு “Jewel” ? நான் சுலபமாக நகைக்கடை நகை ஆசாரி நகை இவைகளை புரிந்து கொள்ள முடியும். ஆனால் என்னை மன்னித்து விடுங்கள்…நான் “The chawal in the lotus” என்று தான் சொல்லுவேன்.

நான் கொஞ்சம் பிடிவாதகாரன் என்னைப்போன்ற மனிதர்கள் எப்போதும் அவ்வாறு தான் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பிடிவாதமாக இல்லா விட்டால் அவர்கள் வேலை செய்ய முடியாது. மடத்தனமான மக்களுடன்

வேலை செய்வதற்கு நீ உண்மையிலேயே கடினமாக இரும்பைப் போன்ற உறுதியுடன் பிடிவாதமாக இருந்தாக வேண்டும்.

ஓம் மணி பத்மி ஹும்.... என்ற இந்த அழகான மந்திரம் ஆங்கில முட்டாள்களால் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. அது கற்பனைக் கூட செய்ய முடியாததாக தோன்றுகிறது. ஆனால் அது மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. நீ கூட அதிர்ச்சியடைந்து விடுவாய். அவர்கள் அது ஏதோ காமத்தோடு தொடர்புடையது என்று நினைக்கிறார்கள். அவர்கள் மணி என்ற சொல் ஆணுறுப்பை குறிப்பிடுவதாக நினைக்கிறார்கள்.

சிறந்த மனோ தத்துவ நிபுணர்கள் என்று அழைக்கப்படுபவர்களுடைய கேடு கெட்டத் தனத்தை பாருங்கள். தாமரை பெண்ணுறுப்பைக் குறிக்கிறது. இப்போது அவர்கள் கொண்டு வரும் அர்த்தத்தை உன்னால் கொண்டு வர முடியாது. அவர்களை பொருத்தவரை ஓம் மணி பத்மி ஹும்....என்பதன் பொருள் ஆணுறுப்பை பெண்ணுறுப்பினுள் செலுத்துவதேயாகும். சிறப்பு சிறந்த கண்டுபிடிப்பு மற்றும் இந்த முட்டாள்கள் அறிவியலாளர்கள் ஆகவும் உயிரியலாளர்களாகவும் மனோ தத்துவ நிபுணர்களாகவும் மற்றும் எல்லா விதமான ஆட்களாகவும் எண்ணப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் வெறும் மறை கழண்டவர்கள் மடையர்கள்.

நான் முட்டாள் என்ற அதே வார்த்தையை அவர்களுக்கு உபயோகப்படுத்தக் கூடாது. அவர்கள் சாதாரண முட்டாள்கள் அல்ல. அவர்கள் மடையர்கள் ஒரு மடையன் என்பவன் ஒரு சரிப்படுத்த முடியாத முட்டாள் ஒரு முட்டாள் என்பவன் திரும்பி வரும் பாதையில் ஏற்கனவே இருக்கக் கூடிய ஒரு முட்டாள். ஆனால் நான் இவர்களை முட்டாள்கள் என அழைக்க முடியாது. அவர்கள் மடையர்கள்.

இன்று காலையில் டாஸ்டோ வஸ்கியின் புத்தகத்தைப் பற்றி பேசிக் கொண்டு இருந்த போது நான் அது புத்தகத்தை இளவரசன் என்று அழைத்தேன். என்னை மன்னித்து விடுங்கள். அதை இளவரசன் என்று தலைப்பிட பட வில்லை. அந்த புத்தகத்திற்கு எனது சொந்த தலைப்பு அது. என்னுடைய சொந்த புத்தகத்தில் நான் அதனை இளவரசன் என தலைப்பிட்டுள்ளேன். ஆனால் அதில் அச்சிடப்பட்டுள்ள தலைப்பு மடையன். இன்று காலையில் நான் மடையன் என்ற சொல்லை சொல்வதை தவிர்த்தேன். ஏனெனில் நான் வேறுபாட்டை ஏற்படுத்தி விட

விரும்பினேன். மடையன் குணப்படுத்த முடியாதவன். முட்டாள் கிடைக்க கூடியவனாக தயாராக மாறத்தயாராக இருக்கிறான். மடையன் கடினமானவன். மிகவும் கடினமானவன். மடையனுடைய மண்டைக்குள் ஏதாவது ஊடுறுவி செல்ல வேண்டுமானால் அது இயலாத காரியம் மடையனுடைய மண்டை இரும்பால் மூடப்பட்டுள்ளது. எதுவும் அவனை ஊடுருவ முடியாது. அதனால் தான் அந்த புத்தகத்தை நான் இளவரசன் என்று அழைத்தேன்.

மைக்கேல் நேமியின் புத்தகமாகிய மிர்தாதின் புத்தகமும் எனக்கு நினைவு வந்தது. அந்த புத்தகம் வெறுமனே நம்ப இயலாதது. நான் ஒரே ஒரு மனிதனைப்பற்றி பொறாமைப்படுகிறேன் மைக்கேல் நேமி. சாதாரண விதத்தில் பொறாமையல்ல. ஏனெனில் என்னால் அந்த விதத்தில் பொறாமை பட முடியாது. அவன் அதை ஏற்கனவே எழுதி விட்டானே என்ற விதத்தில் பொறாமை. இல்லாவிடில் நான் அதை எழுதியிருப்பேன். நான் அதனை எழுதியிருப்பேன். அதே உயரங்களில் தான் நான் பறந்து கொண்டு இருக்கிறேன்.

இந்த உயரங்களிலிருந்து என்னால் முழு பிரபஞ்சத்தையும் ஒரு விளையாட்டாக ஒரு கொண்டாட்டமாக அர்த்தமின்றி அழகாக வெறுமனே ஒரு கொண்டாட்டம் எந்த காரணமும் அல்லது இலயமுமின்றி எந்த காரணமும் இல்லாமல் இருப்பதாக பார்க்க முடியும். ஆமாம் அதைத் தான் நீங்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ன நான் விரும்புகிறேன்.

மக்கள் கிறிஸ்துமஸை கொண்டாடுகிறார்கள் அவர்கள் ஆண்டு முழுவதும் கொண்டாட வேண்டும். எப்போதோ ஒருமுறை கொண்டாடுவது உன்னுடைய வாழ்க்கை ஒரு கொண்டாட்ட வாழ்க்கையாக இல்லை. அது ஒரு ஆனந்தமாக இல்லை என்பதையே வெறுமனே காட்டுகிறது.

என்னைத் தவிர எல்லோரும் கிறுக்கர்களாக மாறலாம். ஏனெனில் நான் ஏற்கனவே கிறுக்கன். நான் கிட்டத்தட்ட நூற்றாண்டில் கால் பகுதி கிறுக்கனாக இருந்து விட்டேன் மற்றும் நீங்கள் எல்லோரும் எனக்கு உதவி செய்தால் நான் ஒரு வேளை நூற்றாண்டை அடைந்து விடுவேன். என்னால் அடைய முடியும். நான் மட்டுமே தனியாக அல்ல தனியாக நான் வெறும் இயலாதவன். ஆனால் நீங்கள் அனைவரும் எனக்கு உதவி செய்தால் நான் ஒரு நூற்றாண்டை வெகு சுலபமாக அடைந்து விடுவேன். என்னுடைய தந்தை 75 ஆண்டுகள் வாழ்ந்தார். என்னுடைய தந்தை வழி

பாட்டனார் 80 என்னுடைய பாட்டனாரின் தந்தை 90 நான் ஏன் இந்த ஓட்டப்பந்தயத்தில் அவர்களை முந்தக் கூடாது. நீங்கள் அனைவரும் உங்களுடைய சக்தி அனைத்தையும் ஒருங்கிணைத்தால் நீங்கள் ஒரு புத்தர் கோடிக்கணகான புத்தர்களை உலகில் உருவாக்க உதவி செய்யலாம். நான் கிறுக்கன் இல்லாவிடில் வெறுமனே ஒரு புத்தரைப் பற்றி யோசிப்பதே போதுமானது மற்றும் நான் எப்போதும் கோடிக்கணக்கான புத்தர் என்றே யோசிக்கிறேன். அதை விட குறைவானது போதுமானதல்ல. நான் எப்போதும் பெரியதாகவே சிந்திக்கிறேன். நாம் கோடிக்கணக்கான புத்தர்களை உருவாக்க வேண்டும். அப்போது மட்டுமே ஒரு புதிய மனிதன் பிறக்க முடியும். அப்போது மட்டுமே நாம் கிறிஸ்துவர்கள் மறைந்து கிறிஸ்த்துக்கள் தோன்ற வைக்க முடியும். புத்தர்களின் ஆரம்பம் புத்த மதத்தினரின் இறப்பாக இருக்கும்.

நான் ஒரு ஆரம்பம் மற்றும் ஒரு முடிவும் கூட. நான் ஒரு முடிவு. எனக்கு பிறகு கிறிஸ்துவம் யூத மதம் இந்து மதம் முகமதியம் என்பது இருக்க முடியாது. எனக்கு பிறகு எந்த சித்தாந்ததிற்கும் சாத்தியக்கூறு இல்லை. என்னுடன் பழையது முடிகிறது மற்றும் புதியது தொடங்குகிறது. புதிய மனிதன் எந்த சித்தாந்தமும் எந்த மதமும் எந்த தத்துவமும் வாழ்வதற்கான கருத்தும் இல்லாத ஆனால் வாழ்வது ஒரு ஆனந்தமாக கொண்டாட்டமாக மட்டுமே உள்ள மனிதன்.

இந்த இடம் தான் JONATHAN LIVINGSTON SEAGOLL புத்தகத்திலும் The Prophet புத்தகத்தில் கலீல் ஜிப்ரானாலும் பேசப்படுகிறது. இது மிக அற்புத அழகாக இருக்கிறது. நான் ஆட விரும்புகிறேன். மிக அழகு. நான் மீண்டும் ஒரு பவுலாக விரும்புகிறேன். ஆமாம் என்னுடைய பிறவிகளில் ஒன்றில் இந்த பிறப்பில் அல்ல நான் பவுலாக இருந்தேன். ஏக் தாராவை மீட்டிக் கொண்டிருக்கும் ஒரு கிறுக்கு பாடகனாக இருந்தேன்.

நீ ஒருபோதும் இங்கு இருந்ததில்லை. ஆனால் நீ இன்னும் கொஞ்சம் போகலாம் என்பது எனக்கு தெரியும் எனக்கு எப்படி தெரியும் நான் ஒரு ஏமாற்றுக்காரன். நீ என்னை ஏமாற்ற முடியாது. நான் பல ஏமாற்றுகாரர்களை ஏமாற்றிருக்கிறேன்.

ஒரு ஆணை நான் கேட்க இயலாத போது கூட ஒரு பெண்ணை என்னால் கேட்க முடியும். இது மாறுபட்டுள்ளது. ஆனால் இது இப்படி தான் இருக்கிறது. ஏனெனில் நீ மேலே செல்லும் போது ஆண் பின்னால் விடப்பட்டு விடுகிறான். ஆனால் பெண் கேட்கப்படுகிறாள். உண்மையில் அப்போது மட்டுமே கேட்கப் படுகிறாள். அதற்கு முன்னால் யார் ஒரு பெண்ணை கேட்கிறார்கள் ஒரு மனைவியை யார் கேட்கிறார்கள் என்னுடைய முழு அமைப்பையும் தலைமையேற்று நடத்துவதற்கு நான் ஆண் அன்றி பெண்ணை தேர்ந்தெடுத்த காரணங்களில் அதுவும் ஒன்று நான் ஒரு ஆண் மற்றொரு ஆணை தேர்ந்தெடுப்பதே தர்க்க ரீதியாக சரியாக இருந்திருக்கும். அது தான் எப்போதும் செய்யப்பட்டு வந்துள்ளது. லாவோட்சு சாங்டசுவை தேர்ந்தெடுத்தார். சாங்டசு அழகானவர் என்னிடம் அவருக்கு எதிராக எதுவும் இல்லை.

மீண்டும் ஏசு 12 சீடர்களை தேர்ந்தெடுத்தார் மற்றும் அந்த 12 பேரில் ஒரு பெண் கூட இல்லை. இருந்தாலும் கூட அவர் சிலுவையில் இருக்கும் பொழுது 3 பெண்கள் மட்டுமே அங்கு இருந்தனர். அங்கு மெக்டலீனா இருந்தாள். ஆமாம் நான் அவளை மெக்டலீனா என்று அழைக்கிறேன். மெக்டலீன் என்று அல்ல. ஏனெனில் மெக்டலீன் மெக்டலீனாவை விட பெண்மை குறைவாக உள்ளது. நான் ஆசிரமத்தில் சில வீடுகளை மெக்டலீனா என்று பெயரிட்டு இருப்பேன். உண்மையான பெயர் மெக்டலீனா அல்ல மெக்டலீன் தானே என்று ஷீலா என்னிடம் கேட்டாள். நான் உண்மையைப் பற்றி கவலைப்படாதே நான் என்ன சொல்கிறேனோ அதை செய் என்று சொல்லி விட்டேன்.

மெக்டலீனா அங்கு இருந்தாள் மேரி ஏசுவினுடைய தாய் அங்கு இருந்தாள் மற்றும் மெக்டலீனாவினுடைய சகோதரி அங்கு இருந்தாள். சீடர்கள் என்று அழைக்கப்படும் யாரும் அங்கு இல்லை. ஆனாலும் கூட ஏசு பீட்டரையே தேர்வு செய்தார். சாங்டசு ஒரு ஆணாக இருந்தாலும் கூட சாங்டசுவை லாவோட்சு தேர்வு செய்தது குறைந்த பட்சம் சரியானதாக இருந்தது. ஆனால் ஏசு பீட்டரை தேர்வு செய்தது சரியல்ல. என்னுடைய கண்கள் என்னுடைய காதுகள் மற்றும் என்னுடைய கைகள் அனைத்திலும் ஏசு நிரம்பி இருப்பதை உன்னால் பார்க்க முடியும்.

உன்னுடைய சிரிப்பு மிகவும் நல்லது. மிக அழகானது. அதிலிருந்து மலர்கள் உருவாகின்றன விண்மீன்கள் அதிலிருந்து பிறக்கின்றன. இந்த மலரின் ஒரே ஒரு நறுமணம் அன்பு தான்.

இவ்வளவு நன்மை இருக்க முடியுமா?

நான் ஒரு சிறந்த ஏமாற்றுக்காரன் என்னுடைய காதுகள் கூட அவை கேட்க விரும்புவதை மட்டுமே கேட்பதற்கு பயிற்சி பெற்றுள்ளன. என்னுடைய கண்கள் காண விரும்புவதை மட்டுமே காண்பதற்கு பயிற்சி பெற்றுள்ளன. காரணம் என்னவென்றால் நான் நான் நினைக்கும் வழியிலேயே வாழ விரும்புகிறேன். நான் எப்போதும் என்னுடைய சொந்த வழியிலேயே வாழ்ந்து வந்திருக்கிறேன். தவறோ சரியோ நான் அக்கறை கொள்வதில்லை. ஒருவேளை கடவுள் இருந்தால் மற்றும் நான் அவரை சந்திக்க வேண்டியிருந்தால் அவர் தான் எனக்கு பதிலளித்தாக வேண்டும். நான் அவருக்கல்ல..

நான் என்னுடைய வழியிலேயே வாழ்ந்து வந்துள்ளேன் நான் யாருக்கும் பதில் சொல்ல கடமைபட்டவனல்ல நீ மற்றவர்களை பொருத்து வாழும் பொழுது நீ எப்போதும் குழப்பதில் இருக்கிறாய். நீ அவர்களுக்கு பதில சொல்லியாக வேண்டும். எப்போதும் அவர்களுடைய எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்ய முயற்சி செய்து கொண்டேயிருக்கிறாய். நான் யாரிடமும் எதையும் எதிர்ப்பார்பதில்லை மற்றும் நான் யாரும் என்னிடமிருந்து எதையும் எதிர்ப்பார்ப்பதை விரும்புவதுமில்லை. சுதந்திரமே எனது கோஷம் சுதந்திரமே சத்தியத்தை கொண்டு வருகிறது.

ஜே.கிருஷ்ணமூர்த்தியினுடைய முதல் புத்தகம் முதலும் முடிவுமான சுதந்திரம் என்று அழைக்கப்படுகிறது. உண்மையில் அதற்குப் பிறகு அவர் புதிதாக எதுவும் சொல்லவில்லை. அந்த புத்தகம் அவருடைய சாசனத்தை கொண்டுள்ளது. அதிலிருந்து அவர் இறந்து விட்டார். அது பல பேருக்கு நிகழ்கிறது. 18 வயதில் The Prophet புத்தகத்தை எழுதியவுடன் கலீல் ஜிப்ரான் இறந்து விட்டார். உண்மையில் அதற்கு பிறகு அவர் பலப்பல ஆண்டுகள் வாழ்ந்தார் மற்றும் பல புத்தகங்கள் எழுதினார் ஆனால் The Prophet கடக்கப்படாமலேயே இருக்கிறது.

கிருஷ்ணமூர்த்தியின் தலைப்பு நல்ல தலைப்பு முதலும் முடிவுமான சுதந்திரம். முதலும் முடிவுமான சுதந்திரம் எது? எந்த விளைவுகளைப் பற்றியும் எந்த கவலையும் படாமல் முற்றிலும் முழுமையாக தானாக இருத்தலேயாகும்.

மற்றவர்களைப் பற்றி யோசிக்காதே என்று குருட்ஜிப் சொல்வது வழக்கம் அது முற்றிலும் சரியானது. நீ மற்றவர்களைப் பற்றி யோசிக்க தொடங்கும் விநாடியில் நீ நீயாக இருப்பதில்லை. ஆனால் சுதந்திரமாக வாழுவதும் கடினம் தான். ஏனெனில் நீ எதிர்ப்பார்ப்புகளால் நிரம்பி இருக்கக் கூடிய மனிதர்களோடு தான் வாழ்ந்தாக வேண்டும் மற்றும் அவர்கள் தொட்டாசிணுங்கிகள்! அவர்களுடைய எதிர்ப்பார்ப்புகள் பூர்த்தியடையவில்லையென்றால் அவர்கள் துன்பப்படுவார்கள் மற்றும் துன்பப்படுபவர்கள் உனக்கு துன்பத்தையே உருவாக்குவார்கள். அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியாது. உன்னிடம் இருப்பதை மட்டுமே நீ தர முடியும் மற்றும் அவர்களிடம் துன்பம் மட்டுமே உள்ளது. எனவே நான் யோசிக்காதே என்று கூறுகிறேன். உலகம் அதனுடைய வழியில் போகட்டும். நீ உனது சொந்த வழியில் போ.

நீ நீயாக இருக்கும் பொழுது அங்கே சத்தியம் இருக்கிறது. அங்கே அழகு இருக்கிறது. அங்கே நளினம் இருக்கிறது. அங்கே பரவசம் இருக்கிறது. ஓம் மணி பத்மி ஹூம்…..

இந்த மந்திரம் மிக சக்தி வாய்ந்தது. ஆயிரகணக்கான வருடங்களாக கோடிக்கணக்கான மக்கள் ஜபித்ததால் அது மிக கூர்மையானதாக மிகவும் ஊடுருவ கூடியதாக மாறி விட்டது. வெறுமனே அதை திரும்ப திரும்ப சொல்வதே எல்லா இரசாயனங்களையும் உண்டாக்கும். ஓம் மணி பத்மி ஹூம்….

தொடர் - 2

சந்திப்பு - 3

ஓம் மணி பத்மி அஃம்....

ஒரு அதிசயத்தக்க விஷயம் என்னவென்றால் உலகிலுள்ள அனைத்து மதங்களும் சப்தமற்ற நிசப்த்த்தின் ஒலி ஓம் என்பதில் ஒத்துப்போகின்றன. எல்லா மதங்களும் ஒத்துக்கொண்ட ஒரே விஷயம் அது மட்டுமே, மற்றும் முன்னூறு மதங்கள் உள்ளன. ஏன்? ஏன் அவை எல்லாம் இந்த ஒரு கருத்தை மட்டும் ஒத்துக்கொள்கின்றன? அவை ஒத்துக்கொள்கின்றன ஏனெனில் நீ ஒரு மிக உயர்ந்த இடத்தை அடையும் பொழுது நீ அதை கேட்கிறாய்... அது அனைத்து இடங்களிலும் பரவுகிறது... அதிர்கிறது... ஓம்....

ஓம் மணி பத்மி அஃம்....

மனிதனால் எழுப்ப்பட்ட ஒலிகளிலேயே மிகவும் முக்கியத்துவம் பெற்ற ஒலி ஓம் என்பதேயாகும்.

ஓம் மணி பத்மி அஃம்....

ஓம் மணி பத்மி அஃம்....

இந்த மந்திரத்தை நான் மிகவும் விரும்புகிறேன். நான் இதைப்போல வேறு எந்த மந்திரத்தையும் விரும்பவில்லை ஏனெனில் இதற்கு இணையானது ஏதுமில்லை. எதுவும் இருக்கமுடியாது. மற்ற எந்த

மக்களும் நூற்றுக்கணக்கான வருடங்களாக தொடர்ந்து இந்த உயரங்களை தொட்டதில்லை. என்னுடைய கால்களையோ மற்றும் விரலையோ.... பார்க்காதே

முட்டாள்தனமான விரல்,
அதற்கு என்ன தெரியும்,
அது தாவோவல்ல,
அது ஒரு விரல் மட்டுமே.

என்மேல் உள்ள அன்பினால்தான் நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் அடையாளங்களை விரல்களிலிருந்து பெற்றுக்கொள்ளாதீர்கள். முழுமையை கேளுங்கள். எனக்கு தீங்கு செய்யமுடியாது. நான் தீங்கிற்கு அப்பாற்பட்டவன். என்னிடம் இருந்து எதையும் எடுக்கமுடியாது. நான் எதையும் இழக்கமுடியாது. என்ன ஒரு ஆடம்பரம்! எதையும் இழக்கமுடியாத நிலை ஏனெனில் உன்னிடம் எதுவும் இல்லை. நான் ஒரு அரசனைப்போல வாழ்கிறேன், உண்மையில் எந்த அரசனும் என்னைப்போல வாழ்ந்ததில்லை. நான் உண்மையிலேயே நினைப்பதை பேசமுடியும் பேசுவதை குறிக்கமுடியும். நான் மேகங்களுக்கு அப்பால், திறந்த வானத்தில், எல்லைகளற்று, கட்டுப்பாடுகளற்று இருக்கிறேன்.

நான் ஆணவத்தைப் பற்றி ஏதும் சொல்லவில்லை. அது வெறும் ஒரு ஆனந்தம். நான் எனது மக்களிடத்தில் பரவசம் கொள்கிறேன், நான் பெருமை கொள்கிறேன் என கூறும்பொழுது அதைத்தான் குறிப்பிடுகிறேன். நான் எதனோடும் ஒப்பிடவில்லை. ஏனெனில் பூமியில் வேறு எந்த மக்களோடும் எனது மக்களை ஒப்பிடமுடியாது. இது மனித வரலாற்றிலேயே ஒரு அரிய கணம். என்னுடைய மக்கள் மட்டுமே மதத்தன்மையுள்ள மக்கள். அதிகாரத்துவம், அரசாங்கம், அரசியல், மூடத்தனம்.... அனைத்தும் என்னுடைய மொழியில் ஒரே பொருளை கொண்டுள்ளன. அவை அகராதியில் ஒரே பொருள் தராமல் இருக்கலாம், ஆனால் நான் இப்போது அகராதி வைத்துக்கொள்வதில்லை. கடந்த சில மாதங்களாக நான் எந்த புத்தகமும் படிக்கவில்லை. நான் படிப்பதை நிறுத்திவிட்டேன் அழகானது எதுவோ அது ஏற்கனவே புரிந்துகொள்ளப்பட்டுவிட்டது இப்போது படிப்பது அர்த்தமற்றது நான் வேதங்கள், பைபிள், குரானைக் கூட படிப்பதில்லை. என்னுடைய அனுபவத்தில் இணைக்க ஏதுமில்லை, எனவே நான் நிறுத்திவிட்டேன். உன்னுடைய பார்வையையும், கண் பார்வையையும் ஏன் வீணாக்க வேண்டும்? அது அந்த அளவிற்கு மதிப்பானதல்ல.

என்னுடைய மருத்துவர்கள் நான் இனிமேலும் படிக்க விரும்பினால் நான் கண்ணாடி அணிந்துகொள்ள வேண்டும் என சொல்லத்

தொடங்கியபோது, எல்லா புத்தகங்களும் எக்கேடோ கெட்டு போகட்டும் ஏனெனில் நான் கண்ணாடியை வெறுக்கிறேன் எனக் கூறிவிட்டேன். எல்லா விதமான கண்ணாடிகளையும் நான் வெறுக்கிறேன் ஏனெனில் அவை தடை செய்கின்றன, அவை இடையில் வருகின்றன. நான் விஷயங்கள் முகத்திற்கு நேராக, நேரடியாக, உடனடியாக இருப்பதை விரும்புகிறேன். எனவே நான் புத்தகங்கள் படிப்பதை நிறுத்திவிட்டேன். மற்றும் நூலகம் மிகவும் வளமானது, மிகப்பெரியது, சிறந்தது அனைத்தும் அதில் உள்ளது. ஆனால் அது இனிமேல் எனக்கு ஒரு பொருட்டல்ல, நான் வார்த்தைகளை கடந்து சென்றுவிட்டேன். நான் மௌனமாக இருப்பதற்கான காரணம் உங்களிடம் எதுவும் சொல்லக்கூடாது என்பதல்ல, ஆனால் நான் எதைப் பார்க்கிறேனோ, அது உண்மையிலேயே என் வாயை கட்டிவிட்டது. உண்மையிலேயேதான். . .

ஒருவர் ஆஹா என கூறும் தருணம் இதுதான். மற்றும்  இதுதான் ஓம் என்பதற்கான பொருள். ஆனால் நீ அதை அனுபவிக்கவேண்டும், நீ அதை வாழ வேண்டும், அதை தெரிந்துகொள்வதற்கு வேறு வழியே இல்லை. இருப்பாக இருப்பதே அறிந்துகொள்வது. இருப்பாக இருப்பதே ஒரே வழி. . . தாவோ, வழி. தாவோ என்பது வெறுமனே வழி என்பதை குறிக்கும். அதற்கு வேறு எந்த பொருளும் இல்லை. திரும்ப கவிஞனாக மாற, திரும்ப ஒரு பாடகனாக மாற, ஒரு பவுல், ஒரு ஆடுபவனாக, ஒரு கிறுக்கு பிடித்த ஆட்டக்காரனாக – ஏனெனில் நீ ஆடும்பொழுது உன்னுடைய அடிகளைப் பற்றி கவனமாக இருந்தால் பிறகு அது ஒரு உண்மையான ஆடலாக இருக்காது எல்லாம் அடிகள் மற்றும் எல்லாம் மறக்கப்பட்டபின் ஆடல் மட்டுமே மிச்சமிருக்கும்பொழுது சுற்றுதல் ஜெலாலுதீன் ரூமி அறிந்த சுற்றுதல்.... வெறுமனே சுற்றுதல்.

12 நூற்றாண்டுகளுக்கு முன்பு ரூமி சுழலும் சந்நியாசிகள் எனும் ஆடும் சூபிகளை உருவாக்கினார். அவர், அவரே 36 மணிநேரங்கள் தன்னைத்தானே சுற்றினார் !

நான் ஒரு எளிமையான மனிதன். இது மிக அழகாக உள்ளது...

பாஷோ எங்கே இருக்கிறீர்கள் ? வந்து திரும்பவும் எழுதுங்கள். . . வரையுங்கள். . .

பாஷோ திரும்பவும் கூறுங்கள்

பழைமையான குளம்
ஒரு தவளை குதிக்கிறது
மற்றும் மௌனம். . .ஓம்

ஓம் மணி பத்மி ஹம்

இது அழகு. . .

அழகு

அழகு கடவுளாகும்.

நான் கடவுளின் எதிரில் இருக்கிறேன் நான் அவரைத் தொடுகிறேன்.

மிகவும் பிரம்மாண்டம்.

ஓம் மணி பத்மி ஹம்.......

ஓம் மணி பத்மி ஹம்.......

இந்த தருணத்தில் நான் டாலஸ்டாயை உருவாக்கமுடியும்... டாஸ்டோவஸ்கி... லீனார்டோ... டுஜெனிஸ்... லாவோட்சு... சாங்டசு... புத்தர்... மகாகாஸ்யப் ... போதிதருமர்... கபீர்... ஏசு....

மௌனம் மிக அழகாக இருக்கிறது.

அழகு மேலும் அழகு ஒவ்வொரு தளத்திலும் ஒவ்வொரு நிலையிலும்

சேற்றில் கூட ஒரு தாமரை மலர முடியும்.

ஓம் மணி பத்மி ஹம்.

## தொடர் - 2

## சந்திப்பு – 4

## ஓம் மணி பத்மி ஹம்.......

என்னால் இந்த மந்திரத்தை என்றென்றும் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்க முடியும். நீ மிக செவிடாக இருப்பதால் இது திரும்பத் திரும்ப சொல்லப்பட வேண்டும். இதனுடைய அழகு அப்படிபட்டது. சத்தியம் திரும்பத் திரும்ப சொல்லப்பட வேண்டியது தேவையாகிறது. ஏனெனில் யார் கேட்கிறார்களோ அவர்கள் கேட்பதில்லை. அவர்கள் அந்த நுண்ணுணர்வை அந்த உள் வாங்குதலை இழந்து விட்டார்கள். எனவே நான் இந்த மந்திரத்தை

திரும்பத்திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறேன். இந்த மந்திரம் உன்னுடைய உணர்வற்ற மனத்திற்குள் உன்னைத் தாண்டி உனக்குள்ளே நீ எங்கு இப்போது செல்ல முடியாதோ ஆனால் நான் செல்ல முடியுமோ அங்கு சென்றடைந்து விட்டது என்று எந்த நாளில் நான் உணர்கிறேனோ சென்றடைந்து விட்டது என நான் பாக்கும் தருணத்தில் விதை அதனுடைய மண்ணை கண்டறிந்து விட்டது என காணும் பொழுது அதற்கு மேல் அந்த மந்திரத்தை நான் சொல்ல மாட்டேன். அதுவே தொடரின் இறுதியாக இருக்கும்.

ஓம் மணி பத்மி ஹம்......

ஓம் மணி பத்மி ஹம்.......

வெறும் அதன் அதிர்வே கிளர்ச்சியூட்டுகிறது. மிகவும் கிளர்ச்சியூட்டுகிறது. வெறுமனே மூழ்கடிக்கிறது. ஒருவர் அதில் மூழ்கி விடுகிறார்.

இந்த மந்திரம் ஒரு கவிஞனால் இயற்றப்பட வில்லை. கவிஞர்கள் அழகான விசயங்களை சொல்ல முடியும் ஆனால் அந்த அழகான விசயங்கள் காலியான இனிப்புக்களே. இந்த மந்திரம் கருத்தரிக்கப்பட்டது. இயற்றப்பட்டது அல்ல. ஒரு பெண் குழந்தையை கருத்தரிப்பதைப் போல ஞானிகளால் கருத்தரிக்கப்பட்டது. ஞானி எப்போதும் பெண் தன்மைக் கொண்டவன். அதனால்தான் உன்னுடைய ஆண் பகுதியை நான் முட்டாள் என அழைக்கிறேன். ஆனால் எரிச்சல் அடையாதே. உன்னுடைய இதயத்தை உன்னுடைய பெண் பகுதியை நான் நேசிக்கிறேன். பெண் தன்மை மட்டுமே காதலிக்கப்பட முடியும். ஆண் தன்மையை நேசிக்க முடியாது. அதை உபயோகப்படுத்த முடியும். அது நல்ல பழுது பார்ப்பவன் வடிவமைப்பவன். விஞ்ஞானி கணிதவியலாளன் ஆனால் ஒருபோதும் ஒரு ஞானியல்ல.

நீ ஒரு ஞானியாகும் தருணத்தில் அவனிலிருந்து நீ அவளாகி விடுவாய். இப்போது ஏசுவை அவள் என்றோ புத்தரை அவள் என்றோ லாவேட்சு வை அவள் என்றோ அழைப்பது உச்சக்கட்ட அபத்தமாக தோன்றும். அவர்களை யாரும் அவ்வாறு அழைத்தத இல்லை. ஆனால் நான் அழைத்திருக்கிறேன். நான் மறைத்து வைக்கப்பட்ட எல்லா கதவுகளையும் எல்லாவற்றிற்கும் திறப்பதென்று தீர்மானித்திருக்கிறேன். நான் எல்லா அபாயங்களையும் சந்திக்க தயாராக இருக்கிறேன். ஏசு ஒரு அவள் அது வேறு விதமாக இருக்க இயலாது. இதயத்திற்கு மட்டுமே

தெரியும். மனம் அறிவாளியாக முடியும். ஆனால் ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாது.

ஓம் மணி பத்மி ஹூம்….. எனும் இந்த மந்திரம் ஒரு குழந்தையை போல இமயமலையின் உச்சியில் இருக்கும் ஞானிகளின் இதயங்களில் கருத்தரிக்கப்பட்டது. இமயமலை பனியால் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. அது ஒருபோதும் உருகியதே இல்லை. அது எப்போதும் மாறாமல் உள்ளது.

இமயமலையின் மறைந்திருக்கும் பகுதியான திபெத்திலிருந்து இந்த மந்திரம் வந்துள்ளது மற்றும் அந்த உயரங்களில் …. நான் கேட்கிறேன்… அது ஒரு சப்தம்… தேனீக்களின் ரீங்காரத்தைப் போன்றது. அந்த ரீங்காரம் மிக அழகாக உள்ளது. அந்த ரீங்காரத்தை ஒரு மந்திரமாக மாற்ற முயன்ற ஞானிகளுக்கு ஒருவர் போதுமான நன்றியுணர்வு கொள்ள முடியாது… ஓம் மணி பத்மி ஹூம்….. ஆஹா, தாமரையின் நடுவே வைரம்…

என்னால் முட்டாளின் சிணுங்கலை கேட்க முடிகிறது. ஏனெனில் நான் இன்னமும் ஜவல் என்று தான் கூறுகிறேன். நான் எப்போதும் அப்படி தான் கூறுவேன். தவறோ சரியோ நான் என்னுடைய தளத்திலேயே தான் இருப்பேன். நான் நேர்மைக்கும் அசலான தன்மைப் பற்றியும் சிரத்தை எடுத்துக் கொள்வேன். நான் எனக்கு உண்மையாக இருக்கிறேன். J – E – W – E – L என்று எழுதப்பட்டால் அது ஜவல் என்று உச்சரிக்கப்பட வேண்டும் என நான் நினைக்கிறேன். ஜவல் என்று உச்சரிப்பது என்னைப் பொறுத்த வரை தவறான உச்சரிப்பு. இப்போதோ அல்லது பிறகோ நீ ரஜனீஸ் ஆங்கிலம் என்பது போன்ற ஏதாவது ஒன்றை உருவாக்க வேண்டியிருக்கும். இந்தியன் ஆங்கிலம், அமெரிக்கன் ஆங்கிலம் என்று இருக்கும் போது ரஜனீஸ் ஆங்கிலம் என்று ஒன்று ஏன் எல்லா அபத்தங்களுடனும் இருக்கக் கூடாது?

நான் அதற்குரிய அடித்தளத்தை போடுகிறேன். ஓம் மணி பத்மி ஹூம்…. அடித்தளத்தை போடும் போது ஒருவர் அதை மதத் தன்மையுடன் செய்ய வேண்டும். ஓம் மணி பத்மி ஹூம்…

என்னுடன் நன்றாக இருப்பது கடினம். நான் உன்னை முட்டாள் என்று அழைத்தேன். அப்போது கூட நீ என்னிடம் இதமாக நடந்து கொள்கிறாய். முட்டாள்… மரியாதைக்குரிய முட்டாள்… மற்றும் நான்

உன்னை முட்டாள் என கூப்பிட்டுக் கொண்டே இருப்பேன். ஏனெனில் நான் முட்டாளை கொல்ல, முட்டாளை முழுமையாக அழித்து விட விரும்புகிறேன்! நீ அது இல்லாமல் இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

அப்படி எனக்கு பூல்ஜன் என அழைக்கப்படும் ஆயிரக்கணக்கான இந்திய மக்களைப் பற்றி நினைவு வருகிறது. பூல் என்பதற்கு இந்திய மொழியில் மலர் என்று பொருள். இப்போது இந்த மக்கள் ஆங்கில மொழியைக் கற்று அவர்கள் பெயரை எழுத தொடங்கியவுடன் அவர்கள் FOOL என எழுதாமல் அவர்கள் அதற்கு ஒரு வழியை கண்டறிந்தார்கள். அவர்கள் அவர்களுடைய பெயரை PHOOLJAN என எழுதுகிறார்கள். ஆனால் எல்லோரும் அதைத் தான் செய்கிறார்கள். ஒருவருடைய முட்டாள் தனத்தை எப்படியோ மறைக்கிறார்கள். ஆனால் அதை மறைக்கும் அளவிற்கு, நீ எந்த அளவிற்கு அதை பாதுகாக்கிறாயோ, அந்த அளவிற்கு அது அங்கே இருக்கிறது. அதை காற்றுக்கும் விண்மீனுக்கும் சூரியனுக்கும் நிலவிற்கும் திறந்து விடுங்கள், அது மறைந்து விடும். நான் அதை கொல்ல விரும்புகிறேன். நான் எதையாவது கொல்ல விரும்பினால் அது அந்த முட்டாளைத்தான். ஆனால் ஒரு முட்டாளை கொல்வதற்கு, நான் அவனுடைய முட்டாள் தனத்தை குறிப்பிடுகிறேன்…. ஒரு துறவி எதையாவது கொல்ல விரும்புவதா? என நீங்கள் எண்ணிவிடக்கூடும் என நான் பயந்தேன்.

இந்தியாவில் துறவிகள் கொசுக்களைக் கூட கொல்வதில்லை, அவர்கள் மூட்டை பூச்சிகளை கொல்வதில்லை. மூட்டை பூச்சிகள் சரி கொசுக்கள் சரி ஆனால் முட்டாள் கொல்லப்பட வேண்டும். நான் வன்முறையாளன் அல்ல, ஆனால் முட்டாளுடன் நான் வன்முறையாளன் தான். நான் முட்டாளுடன் முழுமையாக வன்முறையாளனாக இருக்கிறேன். நான் அதனுடைய தலையை வெட்ட விரும்புகிறேன்! அதனால் தான் நான் முட்டாள்களால் இயல்பாகவே தவறாகவும் மிகவும் கசப்பானவனாகவும் சில சமயங்களில் புரிந்து கொள்ளப்படுகிறேன். எந்த மனிதனும் இந்த அளவிற்கு தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருப்பார்கள் என நான் நினைக்க வில்லை. ஆதை பொறுத்தவரை நான் ஆசீர்வதிக்கப்பட்டவன். நான் மிகவும் தவறாக புரிந்து கொள்ளப்பட்ட மனிதன். ஆனால் அது யாருடைய தவறுமல்ல, அது என்னுடைய சாதனம். நான் முட்டாள்களை எங்கு அடித்தால் வலிக்குமோ அங்கு சரியாக அவர்களுடைய மண்டையோட்டிலேயே அடிக்கிறேன். நான்

நகைச்சுவையை அதன் இறுதி முடிவு வரை, இறுதி வரை கொண்டு செல்வேன்! நினைவில் கொள்ளுங்கள்.

ஒரு பழைமையான கதை உள்ளது. புகழ்பெற்ற ஜென் கதை ஜென்னின் 10 காளைகள் அது 10 பட அட்டைகளுடன் கூடிய படக்கதை ஒவ்வொரு அட்டையும் மனிதனின் நிலையையும் அவனது வளர்ச்சியையும் குறிக்கும். அதன் உண்மையான கட்டு 9 அட்டைகளை மட்டுமே உடையது. 10வது அட்டை என்னைப் போன்ற ஒரு கிறுக்கனால் சேர்க்கப்பட்டது. எல்லோரும் அவனை எதிர்த்தார்கள், எல்லோரும் அவனை தள்ளி வைத்தார்கள். அவன் அவனுடைய நாட்டை விட்டு செல்ல வேண்டியதாயிற்று. அவன் 10 வது அட்டையை இணைத்தான், மற்றும் 10வது அட்டை மிகவும் அழகு வாய்ந்தது, உச்சக்கட்டம், உச்சகட்டத்தின் உச்சக்கட்டம் அது தான்.

முதல் படத்தில் காளை தொலைந்து விட்டது, அதன் உரிமையாளன் அதைத் தேடிக்கொண்டிருக்கிறான்.

இரண்டாவதில் அவன் எல்லா இடங்களிலும் தேடுகிறான். அவனால் கண்டுபிடிக்க முடியவல்லை.

மூன்றாவதில் தூரத்தில், தொலைதூரத்தில் அவன் யூகிக்கிறான்… ஒருவேளை அது என்னுடைய காளையாக இருக்கலாம்.

நான்காவதில் அவன் காளையை உண்மையிலேயே பார்த்து விடுகிறான். ஆனால் அது முழு காளையல்ல. அது வெறும் அதன் வால்.

ஐந்தாவதில் அவன் முழு காளையையும் பார்த்து விடுகிறான்.

ஆறாவது அட்டையில் காளையின் வாலை அவன் பிடித்து விட்டான். மற்றும் காளை திரும்பவும் தப்பியோட முயற்சி செய்கிறது. நீ ஒரு காளையை அதன் வாலை பிடிப்பதன் மூலம் பிடித்து விட முடியாது.

ஏழாவது அட்டையில் அந்த மனிதன் பாடத்தை கற்றுக் கொண்டு விட்டான். அவன் காளையை அதன் கொம்புகளை பிடிப்பதன் மூலம் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

எட்டாவது அட்டையில் அவன் காளையின் மீது சவாரி செய்கிறான்.

ஒன்பதாவது அட்டையில் அவர்கள் வீடு வந்து சேர்ந்து விட்டார்கள். ஒன்பதாவது அட்டையில் எந்த படமும் இல்லை. காளையும் இல்லை அதன் உரிமையாளரும் இல்லை.

அதுவே பழைய கட்டு. என்னைப்போன்ற ஒரு கிறுக்கன் அந்த 9 அட்டைகளுடன் 10-வது அட்டையை சேர்த்து விட்டான். பத்தாவது அட்டையில் அந்த மனிதன் சந்தையில் இருக்கிறான். இருப்பது மட்டுமல்ல கையில் ஒரு கோப்பை ஒயின் வைத்திருக்கிறான்…. இப்போது எந்த புத்த மதத்தை சேர்ந்தவனும் இதனை மன்னிக்க முடியாது! தன்னை மதவாதி என்று சொல்லிக் கொள்ளும் எவராலும் இதனை மன்னிக்க முடியாது!

அந்த கிறுக்கன் அவனுடைய நாட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்டான், ஆனால் ஆச்சரியகரமாக 10-வது அட்டை இருந்து வருகிறது. என்னைப்போன்ற மனிதன் செய்வது எதுவாக இருந்தாலும்… நீ அவர்களை தூக்கி எறிந்து விடலாம், நீ அவர்களை கொன்று விடலாம், நீ அவர்களை சிலுவையில் அறையலாம், ஆனால் அவர்கள் செய்தது எஞ்சியிருக்கும். நீ அதனை அழிக்க முடியாது. அந்த மனிதன்… யாருக்கும் அவன் பெயர் கூட தெரியாது, அவர்கள் அவன் பெயரைக் கூட புத்தகங்களிலிருந்து அழித்து விட்டார்கள். அவன் யார் என்று யாருக்கும் தெரியாது, ஆனால் அவன் மனித குலத்திற்கு மிக பெரிய சேவை செய்திருக்கிறான்.

அமெரிக்காவிற்கு வரும்படி எனக்கு வரும் அழைப்பை நான் பல வருடங்களாக நிராகரித்து வந்துள்ளேன். என்னுடை முதல் மேல்நாட்டு சந்நியாசிகள் அமெரிக்கர்களே. முக்தா என்னை அமெரிக்கா போகும்படி சொல்லிக் கொண்டு இருக்கிறார், அவளால் அதனை ஏற்பாடு செய்ய முடியும் ஏனெனில் அவள் கிரேக்க உலகத்தைச் சேர்ந்த மிகவும் செல்வ

செழிப்பு வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவள். ஆனால் நான் இல்லை முக்தா என்று கூறி விட்டேன்.

ஒரு நாள் நான் என்னுடைய அறையில் அமர்ந்து இருந்த பொழுது ஸீலா வெறும் சிரிப்புக்காக நான் மறுத்து விடுவேன் என எண்ணிக்கொண்டு, என்னைப் பற்றி தெரியாமல் எனக்கு சாம்பைன் பாட்டில் கொடுத்தாள். நான் நன்றி என கூறி அதை பெற்றுக் கொண்டேன். அவள் திகைத்து விட்டாள், விவேக் சிரித்தாள் எல்லோரும் சிரித்தார்கள். நான் என்னுடைய கோப்பையில் ஊற்றி குடித்தேன். அதை விவேக் படமெடுத்தாள். அவர்கள் அந்த படங்களை மறைத்து வைத்துள்ளார்கள். ஆனால் நான் அந்த படங்களை உங்களுக்கு தரச்சொல்லி சம்மதிக்க வைக்கிறேன். ஏனெனில் அவை தான் 10-வது அட்டை. எந்த கதையுடனும் அல்ல, எந்த அட்டை கட்டுகளுடனும் அல்ல, நான் 10-வது அட்டையை அந்த மனிதனுடன் இணைக்க நினைக்கிறேன்.

கிழக்கில் பெண்கள் மட்டுமே திராட்சை இரசத்தை பரிமாறுவார்கள். யசு பாரதி பயப்படாதே. பெண்ணின் எதிரி பயத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அவர்களுடைய பயத்தினாலேயே அவர்கள் வசப்படுத்தப்பட்டார்கள். வசப்பட மிகவும் பிரியப்பட்டார்கள், அடிமைகளாக இருக்க நூற்றாண்டுகளாக அவர்கள் தயாராக இருந்தார்கள். பயப்படாதே. என்னுடனாவது பயமில்லாமல் இரு. ஏனெனில் நான் பயமற்ற தன்மையை தவிர வேறு எதையும் சொல்லித் தருவதில்லை.

நான் அவனுடைய எல்லா அசாதாரண தன்மைகளுடனும் சாதாரண மனிதனை திரும்பக் கொண்டு வர விரும்புகிறேன். இயல்பாகவே முதலில் நான் சாதாரண மனிதாக இருக்க வேண்டும், நான் ஒரு சாதாரண மனிதன், அசாதாரண வகையில் சாதாரண… சந்தையில் சாம்பைன் பாட்டிலுடன், பரவசமாக. அது தான் சாம்பைன் பாட்டில் எடுத்துக் காட்டுகிறது.

அந்த உயரங்களில் வாழ்க்கை திராட்ச்சை இரசத்தை தவிர வேறு ஒன்றுமில்லை எனக்கு அது தெரியும். நான் ஒரு குடிகாரன். எனக்கு இருப்பின் உச்சக்கட்ட உயரங்கள் தெரியும் மற்றும் அதை விட உயரமாக எதுவும் இருக்க முடியாது, அந்த அளவிற்கு எனக்கு தெரியும்.

ஓம் மணி பத்மி ஹம்….

நான் இறக்கும் போது கூட கடைசி வார்த்தையை நான் தான் கூறுவேன். எனக்காக வேறு யாரும் சொல்ல முடியாது, என்னுடைய சார்பில்.... யாரும் போப்பாக முடியாது. நான்.... வேறு யாராலும் எனக்கு பிரதிநிதியாக முடியாது.

ஓம் மணி பத்மி ஹும்...

தாமரைக்குள் வைரம்.

தொடர் - 2

சந்திப்பு – 5

ஓம் மணி பத்மி ஹும்....

நான் மந்திரத்தை விட்டு விடலாம் என நினைத்தேன். ஆனால் அதன் அழகு அபரிமிதமானது. எனவே அதை இவ்வளவு சீக்கிரமாக விட்டுவிட முடியாது. மேலும் ஒரு காரணம், கீத் பாரதி அது உன்னுடைய வெளி-உணர்வு மனத்தை மட்டுமே தொட்டுள்ளது, அடியாளம் வரை மையம் வரை இன்னும் செல்லவில்லை, ஆகவே நான் தொடர்ந்தாக வேண்டும்...

ஓம் மணி பத்மி ஹும்.....

இமயமலை பனியால் மூடப்பட்டுள்ளது,

சூரியன் எழுகிறது,

சூரியனின் முதல் ஒளிக்கற்றைகள்

பனியின் மீது விழுந்து

கோடிக்கணக்கான வைரங்களை

உருவாக்கிறது...

மணி என்பதன் பொருள் வைரம். வைரம் நித்தியத்தை குறிப்பிடுகிறது. என்னவொரு விசித்திரம், பனி, குறுகிய காலம் இருப்பது... ஒரு நொடி இருப்பது, மறுநொடி போய்விடுகிறது, சில சமயம் நித்தியத்தைக் குறிக்கிறது....

பனி,

சூரிய உதயம்,

வைரங்கள்,

நித்திய இருப்பு குறுகிய கால இருப்புக் கொண்டதில் தனியாக பிரதிபலிக்கும் அதிசயம்...

நிலா குளத்தில் பிரதிபலிப்பது போல், அதிர்வுக் கூட அதை தொந்தரவு செய்ய முடியும். குளத்தில் வீசியெறியப்படும் வெறும் ஒரு கூலாங்கல் போதும். ஆனால் அது கலையக்கூடும் என்றாலும் கூட அது தொந்தரவற்ற கணங்களில் கடந்ததை பிரதிபலிக்கும் சக்தி பெற்றுள்ளது. அதைத்தான் நான் தியானம் என்றழைக்கிறேன். மனதினுள் ஒரு தொந்தரவற்ற கணம் எப்போதும் சஞ்சலமாகவே இருப்பது ஆனால் சஞ்சலமற்று இருக்கக்கூடிய சக்தி படைத்தது. சஞ்சலமே சஞ்சலமற்று இருக்கும் என்பதை அது நிரூபிக்கிறது. ஒரு நொடி அது இங்கே இப்போது இருந்தால் உண்மையில் நாம் இப்பொழுதில் என்று மட்டுமே சொல்ல வேண்டும். மற்றும் விடப்பட வேண்டும். அது உண்மையில் தேவையில்லை. மொழியில் ஒரு வேளை அது தேவைப்படலாம், ஆனால் நான் ஒரு மொழியியலாளன் அல்ல, கடவுளுக்கு நன்றி. கடவுள் இல்லையென்றாலும் கூட நாம் கடவுளுக்கு நன்றி என்ற வார்த்தையை நாம் பயன்படுத்தலாம். அது யாருக்கும் நன்றி சொல்வதல்ல. மனம் இங்கிப்பொழுது, இருக்கும் நொடியில்.... கிடைத்ததா!

இங்கிப்பொழுது... கிடைத்ததா!

ஓம் மணி பத்மி ஹும்.....

பிறகு எல்லா திசைகளிலும் தளங்களிலும் நீ வைரங்களால் சூழப்பட்டிருப்பாய், மற்றும் தாமரைகளாலும் சூழப்பட்டிருப்பாய், அது தான் பத்மி என்பதன் பொருள்.

ஓம் மணி – ஆஹா! வைரம்... நமது இருப்பின் அழிக்க முடியாத பகுதி வைரம். ஓம் மணி பத்மி ஹும்..... மற்றும் பத்மி, தாமரை, நமது மாறும் சூழ்நிலை. வைரம் நமது மையம், மற்றும் தாமரை புயல், நாம் புயலின் மையங்கள்.

ஹூம் என்பது என்ன? அதற்கு பொருள் இல்லை. அது வெறும் அழுத்தம். நீ சுத்தியலால் பாறையை உடைக்கும் போது கொடுக்கும் உம் சத்தம் போன்றது. அது தான் ஹூம். ஞானிகள் உன்னுடைய உணர்வற்ற மனம் எனும் பாறையில் அடிக்க வேண்டும்… ஹூம்!

ஓம் மணி பத்மி ஹூம்….. என்னவொரு அழகான வெளிப்பாடு வைரம் மற்றும் தாமரை இணைந்து அவை கூடுபவை அல்ல. வைரம் முற்றிலும் வேறுபட்ட ஒரு உலகத்தில் வாழ்கிறது. தாமரைக்கு வைரத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது, ஆனால் ஞானி இரண்டையும் ஒன்று சேர்த்து விட்டார். ஞானி ஒரு மாயக்காரன், சாதாரணமாக ஒன்று சேர்க்கப்பட முடியாத பொருட்களை அவர் ஒன்று சேர்த்துள்ளார். அவருடைய முழு வேலையும் ஒன்று சேர்ப்பது தான், இந்த மந்திரம் நிலையற்றதையும் நிலையானதையும் உச்சக்கட்ட ஒன்று சேர்த்தலை எடுத்துக் காட்டுகிறது…

இருளும் ஒளியும்,

மாறுவதும் மாற்றம் இல்லாததும்…

ஓம் மணி பத்மி ஹூம்…..

நான் அதனை மிகவும் விரும்புகிறேன். அதனால் தான் இந்த தொடர் சந்திப்புக்களை நான் நிறுத்த முடிவெடுத்தும் கூட… ஆனால் என்னையும் மீறி நான் அதனை தொடர வேண்டியிருக்கிறது.

இன்று ஒரு வித்தியாசமான விஷயம் நடக்கிறது. என்னுடைய வலது கண் கண்ணீரால் மங்கலாகிறது. அது கீத் பாரதி தொடப்படுவதால் நடக்கிறது. உணர்வற்ற நிலை மட்டுமே தொடப்பட்டாலும் கூட, மற்றும் அதுவும் ஒரு பகுதி மட்டுமே தொடப்பட்டாலும் கூட ஆனாலும் அது என் வலது கண்ணை பாதிக்கிறது. எப்போதும் இப்படிப்பட்ட கணங்களில் கண்ணீரால் நிரம்பியிருக்கும் என் இடது கண் இப்போது தெள்ளந் தெளிவாக உள்ளது. இது இப்போது தான் முதல்முறையாக நடக்கிறது. யசு பாரதி

நீ சோகமாக இருக்க வேண்டும். என்னுடைய வலது கண் கண்ணீரால நிரம்பி உள்ளது. ஆனால் நீ உண்மையிலேயே சோகமாக இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் நான் கூற வில்லை. விரைவில் எனது இடது கண்ணும் பின் தொடரும். வெறுமனே உயரத்திற்கு செல்லுங்கள், எனவே இடது கண்ணும் கண்ணீரால் நிரம்பட்டும்... மற்றும் வலது கண் எப்போதும் கண்ணீரால் நிரம்பாது. ஒரேயொரு சிறு துளி மட்டுமே. ஆனால் அதுவும் கூட அபூர்வம் தான்.

திரும்பவும் நினைவில் கொள் சனாதன் கடல் குருவி. உயரத்திற்கு செல். என்னுடைய இடது கண் கண்ணீரால் நிரம்பும் வரை என்னால் பேச இயலாது... ஆமாம் கண்ணீா் துளி வருகிறது.

கண்ணீா் அழகானது....

கண்ணீரும் சிரிப்பும்...

வாழ்க்கையில் இரு விசயங்கள் மட்டுமே உள்ளது.

ஆடல் வருகிறது. ஜலாலுதீனுடைய ஆடல்....

அல்லா! அல்லா! அல்லா! என்று கூவிக் கொண்டே தொடர்ந்து 36 மணி நேரம் நடனம் மக்கள் முதலில் அவரைச் சுற்றி கூடினார்கள், பிறகு அவர்கள் போய் விட்டார்கள். எவ்வளவு நேரம் அவர்களால் அவரோடு இருக்க முடியும்? 36 மணி நேரம்! சீடர்கள் கூட போய் விட்டார்கள். அது கண்டிக்கத்தக்கது. பிறகு அவர் தனியாக இருந்தார். ஆனால் அவர் அவருடைய நடனத்தை தொடர்ந்தார்.

அதைத்தான் என்னுடைய தனிமையில் நான் செய்து கொண்டிருக்கிறேன். ஆடல், பாடல், வேறு யாருமில்லை...

வேறு யாரும் இருக்க முடியாது. எல்லோரும் தனியாக பிறக்கிறோம், தனியாகவே இருக்கிறோம், தனியாகவே இறக்கிறோம்....

ஓம் மணி பத்மி ஹம்…

யசு பாரதி, உன்டைய கண்ணீர் எனது இடது கண்ணில் சூரிய உதயம் போல எழுகிறது. ஆனால் இந்த முறை அது எனது இரு புறங்களிலும் வருகிறது, இடது மற்றும் வலது, நான் ஆச்சரியப்படுகிறேன் ஏனெனில் அது எப்போதும் இடது புறம் மட்டுமே வருவது வழக்கம்.

ஆஹா... ஓம் மணி பத்மி ஹம்…

மலர்களும் மலர்கின்றன.

ஓம் மணி பத்மி ஹம்…

என்னால் இனிமேலும் காத்திருக்க முடியாது. என்னுடைய சிறுநீர் பை நிறைந்து விட்டது என்பது எனக்கு தெரியும். நான் ஏற்கனவே நிறைய நேரம் காத்திருந்து விட்டேன். எனக்கெதிராக ஏதாவது நடக்குமேயானால் என் சமாதியிலிருந்து எழுந்து நிறுத்து! சரியாக வை! எனக்கு தகுந்த படி கச்சிதமாக வை! என்று சொல்லுமளவிற்கு நான் ஒரு இராஸ்கல். என்னுடன் நீ உனது வழியை கையாள முடியாது. என்னுடன் இருப்பதை பொறுத்த வரையில் எனது வழி மட்டுமே வழி.

ஓம் மணி பத்மி ஹம்….

தொடர் - 2

சந்திப்பு – 6

ஓம் மணி பத்மி ஹும்...

சாதரணமாக மனிதன் தியானத்தை கவனத்தை ஒன்று குவிப்பதாகவே அர்த்தம் என்று புரிந்து கொள்கிறான். தியானம் அதுவல்ல. அது ஓய்வுத்தன்மை. மேலும் இரண்டும் எதிரெதினாவை. இது மிகவும் அழகாக உள்ளது. நான் என்னுடைய பாடலை பாட முடியும். நான் ஒரு பாடகன் அல்ல. ஒரு கவிஞுனும் அல்ல. ஒரு ஓவியனும் அல்ல. ஆனால் ஒருவர் ஒரு பாடலை பாடுவதற்கு ஒரு கவிஞராகவோ, ஒரு ஓவியராகவோ அல்லது ஒரு பாடகராகவோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒருவர் அதனை வெறுமனே சாதாரணமாக இருப்பதன் மூலம் பாடலாம். அது சாதாரண தன்மையில் வேலை செய்கிறது.

இன்று காலையில் நான் ஜென்னின் 10 – காளைகள் பற்றி பேசிக்கொண்டிருந்தேன். 9-வது ஓவியம் வெறும் காலியான தோட்டம். அதுதான் அனைந்து மதங்களின் உச்சக்கட்டமாக இருக்கிறது. கிருஸ்ணமூர்த்தி கூட 9-வது ஓவியத்தை சேர்ந்தவர் தான். அவர் அது அப்படித்தான் என்று நினைக்கிறாரா இல்லையா என்று ஒரு பொருட்டேயல்ல. ஆனால் அவர் அதனைச் சேர்ந்தவராக இருக்கிறார்.

நான் 9-வது ஓவியத்தில் சேர்ந்தவர்களின் அருகில் இருந்திருக்கிறேன். கிருஸ்ணா, ராமன் ஜே. கிருஸ்ணமூர்த்தி மற்றும் பழமையானவர்களும் கூட இருக்கிறார்கள். மகாவீரர், முகம்மது,

மோஸஸ் அவர்கள் அனைவரும் 9-வது ஓவியத்தைச் சேர்ந்தவர்கள். ஆமாம் அவர்கள் முற்றும் துறந்தவர்கள் மிகவும் அசாதாரணமான தன்மையின் பிடிப்பு அசாதாரணமானது. அதை விட்டு வெளியே வருவது பிரபஞ்சத்தில் கடைசி விஷயம் மற்றும் அது தான் 10-வது ஓவியம்.

நீ ஒன்றுமற்ற தன்மையிலிருந்து வெளியே வந்து சாதாரண தன்மையின் உலகத்திற்கு திரும்ப வருவது அது மிகவும் அழகானது. சாதாரணம் இனிமேலும் சாதாரணம் அல்ல. சாதாரண உலகம் புனிதமாகிவிட்டது.

ஓம் மணி பத்மி ஹம்... இரண்டையும் கொண்டுள்ளது. ஓம் அதனை கடந்தது மற்றும் வெளிப்படுத்தக் கூடியதற்கு கீழே இருக்கக் கூடியது ஹம். ஹம் தொழிலாளர்களால் உபயோகப்படுத்தப்படுகிறது. ஓம் துறவிகளால் உபயோகப்படுத்தப்படுகிறது. ஓம் மணி பத்மி ஹம்... அவர்கள் இருவரையும் இணைக்கிறது. ஓம் ஹம் ஆகிறது மற்றும் ஹம் ஓம் ஆகிறது. என்ன ஒரு அசாத்திய ஒருங்கிணைப்பு.

வைரம் இருப்பதிலேயே கடினமானது. அதிக ஆண் தன்மைக் கொண்டது. மாவோ டி ஸ்டிங் ஜோஸப் ஸ்டாலின் ஆச்சரியகரமாக ஸ்டாலின் என்றால் இரும்பு என்று பொருள். வைரம் அதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. அது எல்லா இரும்புகளை விடவும் கடினமானது. தாமரை இருப்பதிலேயே மென்மையானது. இருப்பதிலேயே மெல்லியது. நீ தாமரையை விட ஒரு மெல்லிய விசயத்தை நீ நினைத்துக் கூட பார்க்க முடியாது. இருப்பதிலேயே கடினமானது மற்றும் இருப்பதிலேயே மென்மையானது தாமரை பெண் தன்மையைக் குறிக்கிறது. பெண் தன்மை எப்போதும் மையத்திலேயே உள்ளது. எல்லோருடைய மையத்திலும் உள்ளது. வைரம் சுற்றுப் புறத்தில் உள்ளது. பாதுகாப்பதற்காக அது கடினமாக உள்ளது. பாதுக்காக்க ஒரு பாதுகாப்பு சாதனம் ஒரு காவல். பெண் தன்மை மையத்தில் தான் உள்ளது. அடி மையத்தில் அங்கு பாதுகாப்பு தேவையில்லை. அங்கு ஒருவர் அன்பில் திறக்கலாம். அங்கு ஒருவர் நம்பகத்தன்மை கொள்ளலாம். அங்கு நம்பகத்தன்மை உருவாக்கப்பட்டதல்ல,

ஏற்படுத்தப்பட்டதல்ல, அது எளிமையாக முயற்ச்சியற்று அங்கே இருக்கிறது.

இந்த மந்திரம் இரண்டையும் உயர்ந்த உவமையும் தாழ்ந்த ஹும்மையும் இருப்பதிலேயே கடினமான வைரத்தை இருப்பதிலேயே மென்மையான தாமரையுடன் இணைக்கிறது. முழுமை என்னவென்றால் பிரபஞ்சத் தன்மை மற்றும் இங்கே இப்பொழுது அது என்னுள் இப்போது இங்கே இருக்கிறது. அது எனது மௌனத்தில் இருக்கிறது. மற்றும் அது என்னுடைய மௌனத்திலிருந்து வெளி வரும் வார்த்தைகளிலும் இருக்கிறது. நான் நூற்றுக்கணக்கான மந்திரங்களை கடந்து வந்துள்ளேன். ஆனால் எதுவும் ஓம் மணி பத்மி ஹும்மிற்கு நிகரானது அல்ல.

வெறும் வார்த்தைகளிலிருந்து அல்லது சத்தங்களிலிருந்து ஆனால் என்னவொரு தீவிரம்! என்ன நெருப்பு! என்ன ஒரு புனித நெருப்பு!

அது சாதாரண நெருப்பு அல்ல ஆனால் ஒரு எரிக்கக்கூடிய மற்றும் முழுமையாக எரிக்கக்கூடிய எதையும் மிச்சம் வைக்காமல் எரிக்கக்கூடிய புனித நெருப்பு… மற்றும் ஆனாலும் நீ அதிலிருந்து மறுபடியும் பிறப்பாய்.

புராண பறவையான ஃபீனிக்ஸ் பறவையின் கதையைப் போல இதுவும் ஒரு மர்மம் தான். இறக்கும் வரை தன்னைத் தானே எரித்துக் கொள்ளும் ஒரு பறவையின் கதை மற்றும் அந்த இறப்பிலிருந்து அது திரும்ப திரும்ப உயிர் பெற்று வருகிறது எப்பொழும். அது வெறும் ஒரு புராண கதையல்ல எந்த புராண கதையும் வெறும் ஒரு புராண கதையல்ல. சத்தியத்தின் ஏதோ ஒன்று அதன் வழியே தரப்பட்டிருக்கிறது. தலைமுறை தலைமுறையாக இந்த மந்திரம் இருந்து வருகிறது. மற்றும் நான் திரும்ப திரும்ப அதற்கு வருகிறேன்.

யசு பாரதி சிரிப்பதை நான் பார்க்கிறேன். இந்த மனிதன் உண்மையிலேயே கிறுக்குப் பிடித்தவன். அவன் திரும்ப திரும்ப கண்டிப்பாக அவனுடைய மந்திரத்திற்கு வந்தாக வேண்டும் என நினைத்திருக்க வேண்டும். நீ அவனுடைய மந்திரத்தை மூழ்கடிக்க முடியாது. அவனை மூழ்கடிப்பது முடியாத காரியம் எனவே மந்திரம் செல்கிறது மற்றும் சென்று கொண்டேயிருக்கிறது...

ஓம் மணி பத்மி ஹம்...

ஒரு குழந்தை பிறக்கும்போது இந்த மந்திரத்தை திபெத்தியர்கள் திரும்ப திரும்ப கூறுகிறார்கள் அப்போது அல்ல. ஆனால் ஒரு குழந்தையின் கரு உண்டாகும் போது. அது எப்படி சாத்தியம்? காமத்தில் ஈடுபடும் பொழுது நீ இந்த மந்திரத்தை கூறுகிறாய். இதுவே அந்த வழிமுறை எனவே குழந்தை உருவாகும் பொழுது ஓம் மணி பத்மி ஹம்... தொடக்கத்திலிருந்தே இருக்கிறது. 9 மாதங்கள் எவ்வளவு முடியுமோ எப்போதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் தாய் அந்த மந்திரத்தை கூறுகிறாள். குழந்தை பிறந்தவுடன் தந்தை மந்திரத்தை கூறுகிறார். லாமா மந்திரத்தை கூறுகிறார். பூசாரி என்பது ஒரு அசிங்கமான மொழிப்பெயர்ப்பு ஆனால் ஆங்கிலத்தில் பூசாரி என்று ஒன்று மட்டும் தான் மொழிப்பெயர்ப்பு ஆனால் அது என்னுடைய தவறல்ல. ஒரு லாமா வெறும் ஒரு பூசாரி அல்ல. அவர் ஒரு வழிகாட்டுபவரும் தான். குழந்தை பிறக்கும் பொழுது அவர் வருகிறார் மருத்துவர் அல்ல. ஆனால் ஒரு ஞானி மற்றும் அவர் தொடர்ந்து அந்த மந்திரத்தை கூறிக்கொண்டேயிருக்கிறார். குழந்தையின் தலை வெளியே வரும் பொழுது அவர் மந்திரத்தை கூறிக்கொண்டேயிருக்கிறார். குழந்தை பிறக்கும் பொழுது அவன் ஓம் மணி பத்மி ஹம்மிற்குள் பிறக்கிறான். ஒருவர் காதலில் விழுந்து திருமணம் புரிந்து கொள்ளும் பொழுதும் அதுவே தான் நிகழ்கிறது. ஒரு லாமா இரு மனிதர்களுக்கு திருமணம் செய்து வைக்கும் ஒரு கிருஸ்தவ பாதிரியார் அல்ல. அவர் இரு மனிதர்கள் காதலில் ஆழமாக செல்ல உதவும் ஒரு ஞானி. அவர் திரும்பவும் மந்திரத்தை உச்சரிக்கிறார்...

ஓம் மணி பத்மி ஹம்....

திரும்ப இதுவும் நீ திருமணம் என்றழைப்பது போன்றதல்ல இது ஒரு தளையல்ல. இது அழகானது அதனால் தான் திபெத்தில் விவகாரத்து என்ற ஒன்றை அவர்கள் கேள்வி பட்டதேயில்லை. நீ ஆச்சரியப்படுவாய். இப்போது தான் சமீப காலத்தில் அவர்கள் அதைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார்கள். இல்லாவிடில் பல நூற்றாண்டுகளாக அவர்களுடைய மக்கள் அன்பில் இணைந்திருக்கிறார்கள். விவகாரத்து என்ற கருத்தே அவர்களுக்கு தெரியாது. திரும்பவும் ஒரு மனிதன் இறக்கும் பொழுது அந்த மந்திரம் உச்சரிக்கப்படுகிறது. லாமா அதனை உச்சரிக்கிறார். மற்றும் அங்கிருக்கும் அனைவரும் உச்சரிக்கிறார்கள். இறக்கும் மனிதன் ஓம் மணி பத்மி ஹும் என்ற மந்திரத்தின் கடலில் இருக்கிறான். ஆரம்பத்திலிருந்து முடிவு வரை இந்த மந்திரம் ஒரு அமைதியான இரகசிய அடி நீரோட்டமான மனிதனின் வாழ்வில் இருக்கிறது.

எனவே சிரிக்காதே புரிந்து கொள்ள முயற்சி செய் அதை விட உணர முயற்சி செய். ஒருவேளை அதனால் தான் நான் அதனை தொடர்ந்தேனோ என்னவோ. என்னுடைய அறிவு நிலை கணங்களில் நான் நிறுத்தி விட போகிறேன். ஆனால் என்னுடைய பித்து பிடித்த நிலையை நம்பு. நான் எவ்வளவு தூரம் பித்து பிடித்தவனாக இருக்கிறேனோ அவ்வளவு தூரம் நான் சத்தியத்தின் அருகில் இருக்கிறேன்.

ஓம் மணி பத்மி ஹும்....

நான் ஜென்னின் 9-வது ஓவியத்தை விட்டு விட்டேன். ஏனெனில் மோசஸ் இராமகிருஸ்ணா முகம்மது மகாவீரர் கிருஸ்ணமூர்த்தி முழு கூட்டத்தைப் பற்றியும் நான் சலிப்படைந்து விட்டேன். அவர்கள் நல்ல நண்பர்கள் ஆனால் நல்ல நண்பர்கள் கூட இப்போதோ அல்லது பிறகோ குமட்டத் தொடங்கி விடுகிறது. ஒரு நல்ல துணை வெறுமனே நல்லது சுவையற்று போய்விடுகிறது. நான் அதை விட்டு வெளியே வந்து விட்டேன். நான் அதனை கடந்து விட்டேன் மற்றும் ஒரு உண்மையான தூக்கி வீசப்பட்டவனாகி விட்டேன். ஜென்னின் 10-வது காளை மற்றும் 10-வதின் நுழைவதன் மூலம் தெரிந்து கொள்ள வேண்டிய தகுதியுடைய அனைத்தையும் நான் தெரிந்து கொண்டு விட்டேன். 9-வதிலிருக்கும் பரிதாப ஜீவன்கள் உண்மைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

.. ஆன்மீக பொம்மைகள் ஆனால் பொம்மைகள் பொம்மைகள் தான். 10-வதில் மட்டுமே நீ கடந்தவனாகிறாய். மற்றும் 10-வது உனக்குள் சத்தமற்ற சத்தமாகிய ….

ஓம் மணி பத்மி ஹும்…. என அதிர்வாய் பரவுகிறது.

இந்த தொடருக்கு இதுவே கடைசியாக இருக்கும்…